LAKSALA
State Gift & Souvenir Boutique

# ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලය
# இலங்கை கைப்பணிகள் சபை
# Sri Lanka Handicrafts Board



# 2018
# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# Annual Report

LAKSALA

STATE GIFT & SOUVENIR BOUTIQUE

# *ஆண்டறிக்கை **2018***

## *லக்சல*

## *இலங்கை கைப்பணிகள் சபை*

**உள்ளடக்க அட்டவணை**


| | |
|---|---|
| நிறுவனத் தகவல்கள் | 1 |
| லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு | 2 |
| நோக்கு & செயற்பணி | 3 |
| செயலாற்றுகை மீளாய்வு | 4-6 |
| தொழிற்பாட்டு மீளாய்வு | 7-10 |
| முகாமைத்துவம் | 11-12 |
| பணிப்பாளர் சபை | 13 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 14 |


## நிதிக் கூற்றுக்கள்


| | |
|---|---|
| விரிவான வருமானக் கூற்று | 16 |
| நிதி நிலைமைக் கூற்று | 17 |
| உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று | 18 |
| நிதிப் பாய்ச்சல் கூற்று | 19 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 20-36 |
| கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை | 37-43 |

# அமைப்பின் தகவல்கள்

## சபையின் பெயர்

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

## சட்டத்துடனான படிவம்

**1982** ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க, தேசிய கைப்பணிகள் சபை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட நிறுவனமாகும்.

## பிரதான அலுவலகம்

இலக்கம் : 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7

தொலைபேசி : 011 2055717 / 011 2055501

தொலைநகல் : 011 2594872

மின்அஞ்சல் முகவரி : *info@laksala.gov.lk*

இணையதளம் : www.laksala.gov.lk

சந்தைப்படுத்தல் தகவல் விசாரணை

தொலைபேசி: 011 2680925

மின்அஞ்சல் முகவரி: info@laksala.gov.lk

## கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்

## வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

# லக்சல காட்சிகூடங்களின் வலையமைப்பு

| | | |
|---|---|---|
| 1.கோட்டை | இலக்கம் 60, யோர்க் வீதி, கொழும்பு 01 | 0112323514 |
| 2.தும்முல்லை | இலக்கம் 215, பௌத்தாலோக்க மாவத்தை, தும்முல்லை, கொழும்பு 07. | 0112580579 |
| 3.கண்டி | இலக்கம் 05, சங்கராஜ மாவத்தை, கண்டி | 0812222087 |
| 4.கட்டுபெத்த | இலக்கம் 282, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ | 0112605600 |
| 5.தேசிய நூதனச்சாலை | லக்சல, நூதனச்சாலை வளாகம், கொழும்பு 07. | 0112698263 |
| 6.பத்தரமுல்லை | அபேகம, பெலவத்தை, பத்தரமுல்லை. | 0112786026 |
| 7.குதிரை போட்டி | திடல்குதிரை போட்டி கட்டிடம், ரீட் மாவத்தை, கொழும்பு 07. | 0112677772 |
| 8.வெலிபன்னை I | தெற்கு அதிவேக வீதி, தரிப்பிடம், ‘‘ஏ’’ கிளை ஏ4 மற்றும் கிளை ஏ5, வெலிபன்னை | 0342241607/8 |
| 09. காலி | இலக்கம் .74/1, சமுத்திர மாவத்தை, காலி. | 0912222783 |
| 10.பின்னவளை | யானைகளின் சரணாலயம், பின்னவளை. | 0352265015 |
| 11.பேராதனை | இலக்கம் 14, தாவரவியல் பூங்கா, பேராதனை. | 0812389253/63 |
| 12.கட்டுநாயக்க | 54 டி, வெளியேறும் போக்குவரத்து பகுதி , பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க | 0112260167 |

.

# எமது நோக்கு

இலங்கையில் பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் சந்தையில் முதன்மையாளர் ஆகுதல்.

# எமது செயற்பணி


பரிசுகள் மற்றும் நினைவுப் பரிசு பொருட்கள் துறையில் வளர்ச்சித் திறனை விரிவுபடுத்துவதோடு, சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உயர் பெறுமதிகளை சேர்க்கும் பங்களிப்பை வழங்கி, கிராமிய உற்பத்தியாளர்களுக்கு பெரிய அளவிலான சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளித்து, சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் வர்த்தக ரீதியாக சாத்தியமான நிறுவனமாதல்.

# எமது கேந்திர பெறுமதிகள்

- தரம், நம்பகத்தன்மை மற்றும் பணத்திற்கான பெறுமதி.
- பன்முகப்படுத்தப்பட்ட பரிமாணத்தின்மூலம் சிறந்த வாடிக்கையாளர் தேர்வுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.
- கிராமிய மக்களிடையே பெறுமதிகளை உருவாக்குதல் மற்றும் பெறுமதிகளை பரிமாற்றம் செய்தல்
- வாடிக்கையாளர்களை ஆகக்கூடிய மட்டத்தில் திருப்திபடுத்தல்.

# நிலைபேறுடனான அபிவிருத்தி இலக்குகள்

- **2030** ஆம் ஆண்டில் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்கின்ற உற்பத்திகளின் அளவுகளை இரட்டிப்பாக்கி உள்நாட்டு உற்பத்திகளை மேம்படுத்தல்.
- 2030 ஆண்டாகும்போது பாலின சமத்துவத்தை அடைந்துக்கொள்ளும் நோக்கத்துடன் வழங்குநர்களின் (பெண் வழங்குநர்களின்) மொத்த எண்ணிக்கையை 50% ஆல் விருத்தி செய்தல்.
- விசேட தேவைகள் உள்ளவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2030 ஆகும்போது வழங்குநர்களின் (விசேட தேவை உள்ளவர்களது) எண்ணிக்கையை 25% ஆல் விருத்தி செய்தல்.


Art & Craft
Handloom & Batik
Leather & Ceramics
Tea & Spices
Premium Range
Gem & Jewellery




உள்நாட்டு கைப்பணிகள் உற்பத்தியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன், 1964 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனம் தாபிக்கப்பட்டதுடன், 1982 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலங்கை கைவினை கைத்தொழிற் சபையாக அதனை தாபிக்கப்பட்டது. இத் துறையில் தற்போது லக்சல நிறுவனமானது அரசாங்கத்திற்குரிய மிக பழமையானதும் பெரியதுமான வலையமைப்பாகி உள்ளது.

.








## வாடிக்கையாள்களின் திருப்தியினை உறுதிப்படுத்து-கின்ற வகையில், மனம்கவரும் வாடிக்கையாளர் சேவையினை வழங்குவதற்கு முடியுமானவாறு, பதவியணி உறுப்பினர்களிடையே ஆக்கப்பூர்வமான மனப் பான்மையை விருத்தி செய்தல்

நவீன சந்தை போக்குகளுடன் இணைந்துக்கொண்டு முன்னடை போடுவதற்கு ஆளணி படையின் கடும் தேவை லக்சலவிற்கு உள்ளபடியால், ஊக்குவித்தல் மற்றும் தேவையான முறையான பயிற்சி வழங்குவதன்ஊடாக பதவியணியின் வினைத்திறனை மேம்படுத்துவதன்மூலமாக நிரந்தர மற்றும் ஒப்பந்த பதவியணியின் எண்ணிக்கை ஒழுங்குமுறையாக **40%** மற்றும் **60%** என்ற வகையில் பேணிக்கொண்டு, போட்டியுடன்கூடிய பதவியினரை பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஒரு சிறந்த வாடிக்கையாளர் பராமரிப்புக்குத் தேவையான புதிய ஆட்சேர்ப்புகளின் முழுமொத்த செயல்முறைகளும் ஒப்பந்த நியமனங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. ஊழியர்கள் பெற்றுக்கொள்கின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அவர்களின் வினைத்திறனையும் விளைவுத்திறனையும் தொடர்புபடுத்துவதன்மூலம், நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை மேலும் அடைந்துக்கொள்வதற்கு குறித்த நடவடிக்கைகள்மூலம் பாரிய பங்களிப்பு கிடைக்கப்பெற்றது.

## வழங்குநர்களின் வலையமைப்பு

தமது காட்சிக்கூடங்களின்ஊடாக லக்சல வழங்கல் வலையமைப்புமூலம் விற்பனை செய்வதற்கு தேவையான பரிசுகள் மற்றும் நினைவு பரிசுப் பொருட்களை கொள்வனவு செய்தல், உற்பத்தி வழிமுறைகளை திட்டமிடல், தரக் கட்டுப்பாடு மற்றும் நவீன வடிவமைப்புகளை உருவாக்குதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு இறுதியில் 700 என்ற எண்ணிக்கையில் பதிவு செய்திருந்த உள்நாட்டு கைவினை உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் மேலும் வளர்ச்சியடைந்திருந்ததுடன், இந்த துறையுடன் இணைவதற்கு புதிய உற்பத்தியாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளன.

## இணையதளம் ஊடாக நேரடி தொடர்புமூலம் விற்பனை வசதிகளின் பொருட்டு வசதிகளை அளித்தல்

**2018** ஆம் ஆண்டில் உலகத்தில் எங்கிருந்தாலும் வாடிக்கையாளர் தமது விருப்பம் படி லக்சல விற்பனை பொருட்களை கொள்வனவு செய்வதனை அணுகுவதற்கு, நேரடி தொடர்புமூலம் இணையத்தள வியாபார வசதிகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்தில் லக்சல நிறுவனத்தால் தமது சந்தைப்படுத்தல் முறைகளை மேலும் விஸ்தரித்து செயற்படுத்தியது.

## ஆண்டில் நடைமுறைப்படுத்திய முக்கியமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- பெறுகை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- ஊழியர் விளைவுத் திறன் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- ஆவண முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## பங்குதாரர்களுடன் தொடர்புபடுதல்

| பங்குதாரர் குழு | தொடர்பு கொண்ட வழிமுறைகள் | அமைப்பு ஆர்வம் காட்டும் பிரதான துறைகள் |
|---|---|---|
| ஊழியர்கள் | • வாடிக்கையாளர் திருப்தி தொடர்பான ஆய்வு<br>• உள்ளக சுற்றறிக்கைகள்<br>• இணையதளம்<br>• மனக்குறைகளின் முகாமைத்துவ திட்டங்கள்<br>• **தலைமை நிர்வாக அதிகாரியுடனான சிறிய குழுக்கூட்டங்கள்** | • தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு<br>• ஊதியங்கள் மற்றும் நலன்கள்<br>• தொழில்சார் முன்னேற்றம்<br>• ஆற்றல் மற்றும் அறிவு அபிவிருத்தி<br>• சேவை நிலையத்தின் மனித உரிமைகள்<br>• தொழில் வாழ்க்கையில் சமநிலை |
| வாடிக்கையாளர்கள் | • வாடிக்கையாளர் திருப்தி தொடர்பான ஆய்வு<br>• நேரடி தொடர்பு<br>• வாடிக்கையாளர் சேவை மற்றும் தொடர்புகளில், ஒத்துழைப்பு வழங்கும் இடங்கள்<br>• இணைய தளம் | • உற்பத்திகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மை<br>• ஒழுக்கநெறி நடத்தைகள்<br>• வழங்கிய விலையின் பெறுமதி<br>• புதிய சந்தை மற்றும் வாடிக்கையாளர் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு புதிய உற்பத்திகள் |
| அரச மற்றும் ஏனைய கட்டுப்பாட்டாளர்கள் | • சுற்றுநிருபங்கள்<br>• நிதி மற்றும் ஏனைய அறிக்கையிடல்கள்<br>• கூட்டங்கள் | • ஒழுக்கநெறி நடத்தை<br>• சுற்றாடல் மற்றும் சமூக கட்டுப்பாடு<br>• நிலையான இலாபம் |

| | | |
|---|---|---|
| வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் | • நேரடி தொடர்புகள்<br>• வழங்குநர்களின் மதிப்பிடுகள்<br>• நேரடி உரையாடல்கள்<br>• கூட்டங்கள் | • கைவினைஞர்களையும் தொழில்முனைவோர்களையும் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல்<br>• தொழிற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் செயல்திறன்<br>• போட்டித்தன்மையுடன்கூடிய நலன்கள் |

# தொழிற்பாட்டு மீளாய்வு







SPECIAL SEASONAL OFFER
15%



LAKSALA
Legend of Pure Ceylon Tea
Premium

# சாராம்சப்படுத்திய நிதிசார் செயலாற்றுகை

மீளாய்விற்கான ஆண்டில் லக்சல நிறுவனம் ரூபா 737, 283,033 ஆன மொத்த விற்பனை புரள்வினை பதிவு செய்ததுடன், அதற்கு ஏற்புடையதான விற்பனை ஆகுசெலவு ரூபா.306,324,003. ஆகும். பின்வரும் வரைபடம்மூலம் கடந்த பல ஆண்டுகளில் லக்சல நிறுவனத்தின் தொழிற்பாட்டு சாராம்சம் சமர்ப்பிக்கப்படுகிறது.





**2018** ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள விற்பனை பகுப்பாய்வுமூலம் தும்முள்ள காட்சிகூடத்தின் விற்பனையானது ரூபா.314,092,034 ஆன பங்களிப்பை வழங்கியுள்ளதெனவும், அதற்கு பின்னர் அதிகமான பங்களிப்பை நூதனச்சாலையில் உள்ள காட்சிகூடம் வழங்கியுள்ளதாகவும் அதன் புரள்வு ரூபா. 93,089,687. எனவும் அறியலாம்




## கொள்வனவு பகுப்பாய்வு

**2018** ஆம் ஆண்டில் லக்சல நிறுவனம் ரூபா.309,685,841 பெறுமதியிலான கொள்வனவுகளை மேற்கொண்டுள்ளதுடன், கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் லக்சல நிறுவனத்தின் கொள்வனவுகள் பின்வரும் வரைப்படம்மூலம் காட்டப்பட்டுள்ளது.




**2018** ஆம் ஆண்டில் மேற்கொண்ட பொருட் கொள்வனவுகளை வகைப்படுத்தலின்படி மேலும் பின்வரும் வரைப்படம்மூலம் காட்டப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்ட கொள்வனவுகளை கவனத்தில் கொள்கையில் கலை நூல்களும் கைப்பணி பொருட்களும் அதில் உயர் சதவீதத்தை கொண்டுள்ளது.

.




## செலவின பகுப்பாய்வு

**2018** ஆம் ஆண்டில் செலவுகளை குறைப்பதற்காக பின்பற்றிய நடவடிக்கைகள் காரணமாக செலவினம் ரூபா. 477,158,666 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாகியதுடன், அது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் **10.64%** ஆன முன்னேற்றத்தை பதிவு செய்கின்றது.

.

| | 2018 | 2017 |
|---|---|---|
| நிருவாக செலவினம் | 313,643,115 | 349,774,444 |
| விநியோகச் செலவினம் | 56,287,682 | 55,789,513 |
| ஏற்றுமதி செலவினம் | - | 1,173,468 |
| நிதிசார் செலவினம் | 51,289,163 | 70,421,241 |
| குத்தகை செலவினம் | 5,149,100 | - |
| | **426,369,060** | **477,158,666** |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த செலவினத்தின் அமைப்பு பின்வரும் வரைப்படம்மூலம் காட்டப்படுகின்றது.



# முகாமைத்துவம்



இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல நிறுவனம் அதன் முழுமொத்த தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கு ஏற்புடையதான சட்ட திட்டங்கள், அரசாங்கத்தின் சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நிதி மற்றும் நிருவாக ஆலோசனைகளை பின்பற்றி தமது செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளதுடன், நல்லாட்சி மற்றும் பெறுகை வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றியுள்ளதாக சான்றுப்படுத்தப்படுகிறது. அமைப்பின் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்துக்-கொள்ளும்போதும் ஏனைய உதவி சேவைகளை வழங்கும்போதும் நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் மனிதவள பிரிவு என்பன முகாமைத்துவம் தொடர்பாக முக்கியமான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளன. மீளாய்விற்கான ஆண்டில் நிறுவனத்தின் பதவியணி 135 பேர்களை கொண்டமைந்திருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| **2018.12.31 திகதியில் முழுமொத்த பணியாற்தொகுதி** | | |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 08 | |
| இடைநிலை மட்டம் | 08 | |
| மூன்றாம்நிலை மட்டம் | 57 | |
| ஆரம்ப மட்டம் | 10 | **83** |
| ஒப்பந்த அடிப்படையின் மீதான பதவியணி | **52** | |
| முழுமொத்த பணியாற்தொகுதி | **135** | |

முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பணியாற்தொகுதியின் நிலைமை 158 தொடக்கம் 135 வரை குறைந்துள்ளதாக அறியலாம். போட்டியுடன்கூடிய விற்பனை சூழலில் சிறப்பான வகையில் தயாரிக்கப்பட்ட குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால வியாபார திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டான முயற்சியின்போது, நன்கு பயிற்சி பெற்ற, அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறனுடன்கூடிய பணியாற்தொகுதியை கட்டியெழுப்புவதற்கு பாரிய பணியை ஆற்றப்படுகிறது. சந்தைப்படுத்தல் பணியாற்தொகுதிக்கும் உதவி பணியாற்தொகுதிக்கும் மனம் கவரும் வகையிலான ஊக்குவிப்பு முறையினை அறிமுகப்படுத்துவதன்மூலமும் அவர்களுக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன்மூலமும் ஊழியர்களின் பண்புசார் தன்மை மற்றும் விளைவுத்திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் முழுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 201 ஆகும் வகையில் புதிய அமைப்புக் கட்டமைப்பினையும் உருவாக்கப்பட்டது. மேலும், முழுமொத்த பணியாற்தொகுதி நிரந்தர ஊழயிர்கள் 40% ம், ஒப்பந்த ஊழியர்கள் 60% என்ற வகையில் பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அவ்வாறு மேறகொள்வதன்மூலம் நிறுவனத்திற்கு குறைந்த அர்ப்பணிப்பையும் பொறுப்பினையும் வகிக்கும் வகையில் அதன் சந்தைப்படுத்தல் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கும், உரிய தகைமைகளுடன்கூடிய புதிய பணியாற்தொகுதியினரை பேணிச் செல்வதற்கு முடிந்தது என்பதை சுட்டிக்காட்டலாம்.

# இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

## பணிப்பாளர் சபை

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு.எம் ஹம்ஸா | தலைவர் |
| 02 | திரு.கே.பீ.எச்.விஜேவர்தன | சபை உறுப்பினர் |
| **03** | திரு.என்.நயனசந்திர | சபை உறுப்பினர் |
| 04 | திரு.ஜீ.டி.எஸ்.பீ.குமார | சபை உறுப்பினர் |
| 05 | திரு.ஏ.ஏ.ஏ.ருவாயிஸ் | சபை உறுப்பினர் |
| 06 | திரு.எச்.எம்.எம்.ருவாயித் | சபை உறுப்பினர் |
| 07 | கலாநிதி எம்.எச்.எம்.வஷீர் | சபை உறுப்பினர் |
| 08 | கலாநிதி .எஸ்.எம்.எம்.இஸ்மயில் | தலைவர் (2018/04/26 திகதி வரை) |
| 09 | திரு.ஆர்.ஏ.எல்.உதயகுமார | சபை உறுப்பினர்(2018/05/11 திகதி வரை ) |
| 10 | திரு.ஜீ.டப்.சோமரத்ன | சபை உறுப்பினர்2018/05/11 திகதி வரை ) |
| 11 | திரு.எச்.ஜீ.தன்தெணிய | சபை உறுப்பினர்(2018/05/11 திகதி வரை ) |
| 12 | திரு.அய்.ரியாஸ் | சபை உறுப்பினர்(2018/09/18 திகதி வரை ) |

# இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல
# சிரேட்ட முகாமைத்துவ குழு

| | |
|---|---|
| திரு.எம்.என்.எம்.ஏ.அல்ஹாம் | பணிப்பாளர் நாயகம்/பிரதான நிறைவேற்று அதிகாரி |
| திரு.சீ.என்.தஹநாயக்க | பணிப்பாளர் (மனித வளங்கள்/நிருவாகம்) |
| திரு.கே.சீ.ஜயவர்தன | பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) |
| ஈ.எலன் தெலில்கன் | பதில் கடமையாற்றும் பணிப்பாளர் (நிதி) |
| திரு.கே.பீ.பீ.எஸ்.கே.பத்திரண | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| திருமதி தேவிகா குமாரி அத்துகோரள | பிரதி பணிப்பாளர் (விநியோகம்) |
| திருமதி விஜிதா சமரரத்ன | பிரதி பணிப்பாளர் (பெறுகை) |
| திரு.சம்பத் செனெவிரத்ன | உதவி பணிப்பாளர்(மனித வளங்கள்/ நிருவாகம்) |
| திரு.தினேஷ் அபேகோன் | தகவல் தொல்நுட்ப பிரிவின் தலைவர் |

## எமது நன்றி

எல்லாவற்றுக்கும் முதலாக நான் லக்சல நிறுவனம் சார்பாக, இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரசின் மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கும், கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக, இடம் பெயர்ந்தவர்களை மீள குடியமர்த்தல், கூட்டுறவு அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி அமைச்சர் அவர்களுக்கும் பிரதி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது நிறுவனம் இத் துறையில் உயர்ந்த நிலையினை எட்டுவதற்காக எப்போதும் தேவையான தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் வழங்குதல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், தேவையான எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது நிறுவனத்தின் முன்னேற்றம் கருதி வழங்கிய ஒத்துழைப்பு பொருட்டு நான் எமது அமைச்சின் செயலாளருக்கும் ஏனைய அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறுவனத்தின் நிருவாக, நிதி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மிக நன்றாக நிறைவேற்றும் வகையில் எமது பணியாற்தொகுதியின் உறுப்பினர்களையும், ஒட்டுமொத்த பணியாற்தொகுதியினரையும் சிறந்த முறையில் வழிநடாத்தியமை தொடர்பில் நான் அனைத்து பிரிவுகளின் தலைவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். நிறுவனத்தில் வியாபார நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பேணிச் செல்வதற்கு அவர்களின் வழங்கிய ஒத்துழைப்பு அளப்பரியதாகும்.

எம்முடன் இணைந்துக்கொண்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை சரியாக அடையாளம் காணப்பட்டு, புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தியும், சம்பிரதாய மற்றும் புதிய உற்பத்திகள் அடங்கலாக கைவினை மற்றும் நினைவு பொருட்களை வழங்கியும் எம்முடன் இணைந்துக்கொண்ட உற்பத்தியாளர்களுக்கு இதன் போது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது நிறுவனத்தின்மீது நம்பிக்கை வைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**2018** ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விருத்தி செய்வதற்கு தேவையான நிபுணத்துவ சேவைகளை பெற்றுக்கொண்டு நிறுவனத்தின் சந்தைப்படுத்தலை விரிவாக்குவதற்கு எதிர் பார்க்கின்றேன்.

எதிர் காலத்தில் இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான அனைத்து

நடவடிக்கைகளையும் எமது நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை அறிய தருவதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் எமது விற்பனை ரூபா.பில்லியன் வரை விருத்தி செய்வதற்கு எதிர் பார்க்கப்படுவதாகவும் இறுதியாக கூறுகின்றேன்.

**2019** ஆம் ஆண்டில் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விருத்தி செய்து, தேவையான நிபுணத்துவ சேவைகளை பெற்றுக்கொண்டு நிறுவனத்தின் விற்பனைகளை மேலும் அதிகரிப்பதற்கு நான் எதிர் பார்க்கின்றேன்.

மேலும், நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வதன்ஊடாக ஒட்டுமொத்த பணியாற்தொகுதியிலும் வினைத்திறன் மற்றும் பயனுள்ள பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மூலோபய திட்டத்தின் பிரகாரம், நிறுவனத்தின் பொது செய்றபாடுகளின் செலவுகளை கவனத்தில் கொள்ளக் கூடிய வகையில் குறைத்து 2019 ஆம் ஆண்டில் எமது இலாப சதவீதம் விருத்தியடைகின்ற நிலையில் பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தலைவர்**,**

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

# நிதிக் கூற்றுக்கள்

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
## விஸ்தீரண வருமானக் கூற்று -லக்சல
### 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2018<br>ரூ. | 2017<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | 3 | 737,283,033 | 755,425,556 |
| **விற்பனைச் செலவு** | | (306,324,003) | (315,568,451) |
| **தேறிய இலாபம்** | | **430,959,030** | **439,857,105** |
| கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள் | | - | 50,340,000 |
| வேறு வருமானங்கள் | 4 | 11,851,544 | 10,650,257 |
| நிருவாகச் செலவுகள் | | (313,643,115) | (349,774,444) |
| விநியோகச் செலவுகள் | | (56,287,682) | (55,789,513) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறு** | | **72,879,777** | **95,283,405** |
| நிதிச் செலவு | 5 | (51,289,163) | (70,421,241) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | 6 | **21,590,614** | **24,862,164** |
| வரிச் செலவுகள் | 7 | (5,149,100) | - |
| **வருடத்திற்கான இலாபம்** | | **16,441,514** | **24,862,164** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் 9 முதல் 25 வரை குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தேவையான அங்கமாகும். அடைப்புக்குறிகளுக்குள் உள்ள எண்ணிக்கைகள் மூலம் கழிப்பனவு காட்டப்பட்டது.

**இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை**
**நிதி நிலமைக் கூற்று - லக்சல**
**2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு**

| | குறிப்பு | 2018<br>ரூ. | 2017<br>ரூ. |
|---|---|---|---|
| **ஆதனங்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 8 | 993,113,357 | 1,040,666,126 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | **993,113,357** | **1,040,666,126** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்கள் வகை | 9 | 463,384,277 | 578,948,995 |
| வியாபார் மற்றும் ஏனைய வருமதிகள் | 10 | 108,718,915 | 196,464,192 |
| பணமும் பணத்திற்கு சமமானவைகளும் | 11 | 24,451,300 | 9,470,676 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **596,554,492** | **784,883,863** |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,589,667,849** | **1,825,549,989** |
| **பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **பங்கு உரிமைகள்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 73,628,878 | 73,628,878 |
| மூலதன இருப்புக்கள் | | 510,806 | 510,806 |
| மீள் மதிப்பு இருப்புக்கள் | | 454,366,157 | 454,366,157 |
| கிடைக்கப்பெற்றுள்ள கொடைகள் | | 103,951,172 | 103,951,172 |
| வருமான இருப்புக்கள் மற்றும் வேறு அம்சங்கள் | 12 | (178,017,763) | (38,180,995) |
| தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 5,766,701 | (10,674,813) |
| **மொத்த கையிருப்புக்கள்** | | **460,205,951** | **583,601,205** |
| **நடைமுறை பொறுப்புக்கள் சாராதவை** | | | |
| ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் | 13 | 44,191,479 | 38,062,261 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 14 | 100,184,713 | 125,524,713 |
| நீண்டகால கடன் | 15 | 164,610,344 | 197,828,391 |
| **மொத்த நடைமுறை பொறுப்புக்கள் சாராதவை** | | **308,986,536** | **361,415,365** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 16 | 524,046,871 | 552,865,918 |
| வருமான வரி செலுத்தல்கள் | 7 | 5,149,100 | - |
| குறகிய கால கடன் பெறுகை | 17 | 275,388,387 | 298,600,257 |
| வங்கி மேலதிகப் பற்று | 18 | 15,891,004 | 29,067,244 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **820,475,362** | **880,533,419** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,129,461,898** | **1,241,948,784** |
| **மொத்த முதலீட்டுப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **1,589,667,849** | **1,825,549,989** |

.....
திரு ஈ.ஏ.டெலிகன்
**நிதிப் பணிப்பாளர் (பதில் கடமை)**

*கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் நிதி அறிக்கைகளின் முக்கிய அங்கமாகும். இந்த நிதி அறிக்கைகளை தயாரித்து முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது. 2019 ஏப்ரல் ஆம் திகதி தும்முல்லை அலுவலகத்தில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டது. அதன் பொருட்டு பணிப்பாளர் சபைக்காக கீழே ஒப்பமிடப்பட்டது.*

| | | |
|---|---|---|
| மதுர டி சில்வா | பிரதீப் குமார | மொஹமட் ஹம்ஸா |
| **பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்** | **சபை உறுப்பினர்** | **தவிசாளர்** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் 9 முதல் 25 வரை குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தேவையான அங்கமாகும். அடைப்புக்குறிகளுக்குள் உள்ள எண்ணிக்கைகள் மூலம் கழிப்பனவு காட்டப்பட்டது.

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
## முதலீட்டுப் பங்குகளின் மாறுதல்கள் பற்றிய கூற்று
### 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | அளிக்கப்பட்ட மூலதனம் | மூலதன கையிருப்பு | மீள்மதிப்பு கையிருப்பு | மூலதன கொடைகள் | தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | வருமான கையிருப்புக்களின் வேறு அம்சங்கள் | மொத்த கையிருப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2017 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி** | 73,628,878 | 510,806 | 454,366,157 | 103,951,172 | (35,536,977) | (35,648,094) | **561,271,942** |
| வருடத்திற்கான இலாபம் | | - | - | - | 24,862,164 | - | **24,862,164** |
| வருமான கையிருப்புக்களின் செம்மையாக்கல் | - | - | - | - | | (2,532,901) | **(2,532,901)** |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | 73,628,878 | 510,806 | 454,366,157 | 103,951,172 | (10,674,813) | (38,180,995) | **583,601,205** |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | - | 16,441,514 | - | **16,441,514** |
| வருமான கையிருப்புக்களின் செம்மையாக்கல் | - | - | - | - | - | (139,836,768) | **(139,836,768)** |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **73,628,878** | **510,806** | **454,366,157** | **103,951,172** | **5,766,701** | **(178,017,763)** | **460,205,951** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் 9 முதல் 25 வரை குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தேவையான அங்கமாகும்.
அடைப்புக்குறிகளுக்குள் உள்ள எண்ணிக்கைகள் மூலம் கழிப்பனவு காட்டப்பட்டது.

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
## நிதிப் பாய்ச்சல் கூற்று
**2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது**

| குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | ரூ. | ரூ. |
| **வரிச் செலவுக்குப் பின்னர் தேறிய இலாபம்** | **21,590,614** | **24,862,164** |
| **ஒப்பு நோக்கப்பட்டது** | | |
| சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்திற்கான கடன் கழிப்பு அறவீடு | 3,278,092 | 999,909 |
| ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் | 6,704,212 | 6,467,126 |
| வட்டிச் செலவினங்கள் | 51,289,163 | 70,421,241 |
| தேய்வு | 24,329,921 | 28,398,039 |
| மூலதன செலவினங்கள் கடன் கழிப்பு | 25,340,000 | 22,960,906 |
| கொடைகளுக்கான கடன் கழிப்பு | (25,340,000) | (25,340,000) |
| | **107,192,002** | **128,769,385** |
| **தொழிற்பாட்டு மூலதனத்தின் மாறுதல்கள்** | | |
| பொருள் வகை | (16,718,542) | (23,047,843) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 84,467,185 | (34,396,884) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | (36,372,557) | 36,574,985 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உழைக்கப்பட்ட காசு** | **138,568,088** | **107,899,643** |
| சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்திற்கான கொடுப்பனவுகள் | - | (336,725) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (574,994) | (2,392,846) |
| வட்டி கொடுப்பனவுகள் | (51,289,163) | (70,879,660) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உழைக்கப்பட்ட நிகர காசு** | **86,703,931** | **34,290,412** |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | (2,117,152) | (5,218,310) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய நிதிப் பாய்ச்சல்** | **(2,117,152)** | **(5,218,310)** |
| **நிதி நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | | |
| நீண்டகால கடன் வசதிகள் | 15,824,872 | 68,208,925 |
| கடன் மீள் செலுத்தல் | (72,254,789) | (116,408,626) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய நிதிப் பாய்ச்சல்** | **(56,429,917)** | **(48,199,701)** |
| **காசும் அதனை ஒத்தவைகளினதும் தேறிய அதிகரிப்பு / குறைவு** | **28,156,862** | **(19,127,599)** |
| **வருடத்தின் ஆரம்பத்தில் பணமும் பணத்திற்கு ஒப்பானவையும்** | (19,596,566) | (468,967) |
| **வருடத்தின் இறுதியில் பணமும் பணத்திற்கு ஒப்பானவையும்** | **8,560,296** | **(19,596,566)** |
| வங்கி மேலதிகப் பற்று | (15,891,004) | (29,067,244) |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 24,451,300 | 9,470,678 |
| | **8,560,296** | **(19,596,566)** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் 9 முதல் 25 வரை குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் தேவையான அங்கமாகும். அடைப்புக்குறிகளுக்குள் உள்ள எண்ணிக்கைகள் மூலம் கழிப்பனவு காட்டப்பட்டது.

**இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. நிறுவனத் தகவல்கள்

### 1.0 கம்பனி

லக்சல எனும் வர்த்தக குறியீட்டின் கீழ் பிரசித்திபெற்று செயற்பட்டுவரும் இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை (லக்சல) இலங்கை முழுவதும் தயாரிக்கப்படுகின்ற கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடும் ஒரே அரச நிறுவனமாகும்.

### 1.1 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு தன்மை

சபையின் பிரதான நடவடிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை விற்பனை செய்வதாகும்.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.0 அளவீட்டின் அடிப்படை

2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான சபையின் கணக்கு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (நிதிக் கூற்று) உட்பட அதன் நிதி நிலமை தொடர்பான கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு முதலீடுகளின் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் நிதி பாய்ச்சல் கூற்று இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

பொதுவான மதிப்பின் பிரகாரம் அளவீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தவிர்ந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு சில குறிப்பிட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளை பயன்படுத்துவதற்கு அவசியம் ஏற்படுகின்றது. இந்த நிதி கூற்றுக்கள் இலங்கை ரூபாய் பெறுமதிக்கு அமைய முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.1 மதிப்பீடுகள் மற்றும் முடிவுகளை செயற்படுத்தல்

கொள்கைகளை பயன்படுத்துவது தொடர்பாகவும் சொத்துக்கள் பெறுப்புக்கள் தொடர்பாகவும் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்ற கணக்குகளின் அளவுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கவல்ல முடிவுகளுக்கு, மதிப்பீடுகளுக்கு மற்றும் எடுகோள்களுக்கு வருவதற்கு முகாமைத்துவத்திற்கு தேவையான இலங்கை கணக்கீட்டு தரங்களுக்கு ஏற்ப நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது சிறந்ததாகும். இந்த மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் நிலவிய சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதென நம்பிக்கை கொள்ளும் வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் பல்வேறுபட்ட காரணிகள் மீது அமைந்துள்ளது. அதன் பெறுபேறுகள் ஏனைய மூலாதாரங்களிலிருந்து தெளிவாக மாறுபடாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்லும் பெறுமாணங்கள் மீது

தீர்மானமெடுக்கும் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது. உண்மையான பெறுபேறுகள் இந்த மதிப்பீடுகளிலிருந்து மாறுபடக்கூடும். மதிப்பீடுகள் மற்றும் விசேட கருதுகோள்கள் நிலவும் அடிப்படையின் மீது மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள், கணக்கு வைக்கும் திருத்தங்கள் என்பன மதிப்பீடுகள் திருத்தப்படும் போது இனம் காணப்படும். அவ்வாறு செய்வதன் மூலம் அத்தகைய திருத்தங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது திருத்தப்படும் காலத்திற்கு மாத்திரம் தாக்கத்தைச் செலுத்தக்கூடியதாக இருப்பின் மாத்திரம் அத் திருத்தம் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**2.2 <u>நிலையானயான இறுப்பை நிச்சயித்தல்</u>**

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது எதிர்காலத்தின் நிலையான இருப்பை மென் மேலும் தக்கவைத்துக்கொள்வதற்கு சபையினது சொத்துக்களின் மதிப்பீடொன்று எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால தகவல்கள் அனைத்தையும் கருத்திற்கொள்ளும் போது வியாபாரத்தை மூடிவிடுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ நாம் எதிர்வுகூறமாட்டோம்.

**2.3 <u>ஒப்புநோக்கப்படட தகவல்கள்</u>**

சபையினால் கணக்கீட்டுக் கொள்கைகள் சமமான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கும் ஏற்புடையது. அவற்றை நியாயமாக முன்வைப்பதற்கு தேவையான சந்தர்ப்பங்களில் மீள்வகையீடு செய்யப்பட்டுள்ளன.

**2.4 <u>விசேட கணக்கியல் கொள்கைகளின் சாரம்</u>**

பின்வரும் கணக்கியல் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் முறைக்கு ஏற்ற வகையில் இயைபுடையதாக்கிக்கொள்ளப்பட்டுள்ளதோடு சபையினாலும் அவை மிக சமார்த்தியமாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**2.4.1 வருமானத்தை இனம்காணல்**

பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனத்தை நோக்கி வரும் என அநுமானித்தும் அந்த வருமானம் நம்பிக்கைத் தரக்கூடிய வகையில் அளவீடு செய்ய முடியும் எனவும் கருத்திற்கொண்டு வருமானம் இணங்காணப்படுகின்றது. பெறப்பட்ட அல்லது வருமதியாக உள்ள தொகை அடிப்படையில் சாதாரணப் பெறுமதிக்கு வருமானம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அன்றேல் அது வியாபாரக் கழிவுகள் மற்றும் ஏற்புடைய வரி சேர்க்கப்படாத கிடைக்க வேண்டிய வருமதிகள் என கணக்கிடப்படும்.

வெளிநாட்டு நாணயங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் கட்டுப்படுத்தப்படும் நாணயமாற்றுக் கொள்கையின் அடிப்படையில் மாற்றப்படும்.

ஐந்தொகை தினத்தில் வெளிநாட்டு நாணயங்கள் அடிப்படையில் வகையீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அன்றைய தினத்தில் காணப்படும் நாணய மாற்று வீதத்தின் கீழ் இலங்கை ரூபாய்களுக்கு மாற்றீடு செய்யப்படும்.

**2.4.2 <u>சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள்</u>**

**(அ) அடையாளம் காணல் மற்றும் அளவிடுதல்**

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனியை நோக்கி வரும் என அநுமானித்து மற்றும் சொத்துக்களின் செலவினத்தை நம்பிக்கையுடன் அளவிட முடியும் என்றிருப்பின் மாத்திரம் சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளை இனம்காணும் செயன்முறை ஏற்றுக்கொள்ளப்படும்.

காணிகள் தவிர்ந்த சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட குறைபாடுகளின் நட்டங்கள் கழிக்கப்பட்ட செலவுகளின் பெறுமதிக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துக்களை கைப்பற்றல் தொடர்பான நேரடியாக பிரயோகிக்க முடியுமான செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. செலவுப் பொருட்கள், நேரடி, உழைப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உபயோகத்திற்காக ஏதேனும் சாதகமான நிலமைக்கு சொத்துக்களை கொண்டு செல்வதற்கு நேரடியாக பிரயோகிக்க முடியுமான ஏதேனும் செலவு மற்றும் அவ்வாறான சொத்துக்கள் நிலைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்தளத்தில் உள்ள பொருட்கள் எதனையும் கலற்றி பாகப்படுத்தல் அல்லது அவற்றை மீள்நிலைப்படுத்தல் செலவுகள் சுய நிர்ணய சொத்துக்களுக்குள் அடங்கும். சொத்துகள், ஆலைகள் மற்றும் பொறிகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏதேனுதொரு பொருள் வெவ்வேறான பிரயோசனங்கள் அடிப்படையில் அவற்றின் ஆயுட்காலம் பிரதான பாகங்களோடு தொடர்புபடுகின்ற போது அவை தனியான சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள் என்ற அடிப்படையில் கணக்கிடப்படும்.

சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி ஏதேனும் நிகழ்வுகள் அல்லது மறைமுகமான காரணிகளின் வித்தியாசங்களுக்கு அமைய மீண்டும் அறவீடு செய்ய முடியாதென தெளிவாகும் போது அந்த சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளின் முன்கொண்டு செல்லப்பட்ட பெறுமதி பலவீனமாகக் கருதி மீளாய்வுக்கு உட்படுத்தப்படும்.

சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகளது அகற்றலின் போது கிடைக்கப்பெறும் இலாபம் அல்லது நட்டம் அத்தகைய சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள் என்வற்றுக்கு ஏற்புடைய முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் அதன் அகற்றலின் மீது பணத்தொகையுடன் சீறாக்கம் செய்து உறுதிப்படுத்திக்கொள்வதோடு அவை விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்படும்.

### (ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படுவது, ஏற்புடைய கணக்கு பெறுமதிகள் அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலம் முழுவதையும் வெட்டிவிடும் நோக்கத்துடன் சொந்தமான காணிகள் தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள் என்பவற்றின் செலவுகளின் மீது எழிமையான நேர்கோட்டு வழிமுறையை கையாண்டேயாகும்.

பயன்படுத்தப்பட்ட பிரதான வருடாந்த வீத அளவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| 1. கட்டிடம் | 2.5% |
| 2. இயந்திரங்களும் உபகரணங்களும் | 10% |
| 3. பதியப்பட்டுள்ள பொருட்கள் | 10% |
| 4. தளபாடங்களும் பொருத்திகளும் | 10% |
| 5. கணினி வன் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 20% |

### (இ) சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள் என்பவற்றை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற இலாபம் / நட்டம்

சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகளை ஒதுக்குதல் அல்லது அகற்றுதல் மூலம் கிடைக்கப்பெறும் இலாபம் / நட்டம் என்பவற்றை ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனங்காணப்படுவதோடு வேறு செயற்பாட்டு வருமானங்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

### 2.4.3 நடந்த வண்ணம் உள்ள மூலதன வேலைகள்

ஐந்தொகை தினத்திற்கு வருடத்திற்குள் பூரணப்படுத்தாத மூலதன செலவுகள் முற்பண கொடுப்பனவுகளாக குறிப்பிடப்படுவதோடு, வருடத்தினுள் நிறைவு செய்யப்பட்ட பயன்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட மூலதனச் சொத்துக்கள், சொத்துக்கள், ஆலைகள் மற்றும் பொறிகள் கணக்கிற்கு மாற்றப்படும்.

### 2.4.4 புலனாகாத சொத்துக்கள்

சபையினால் கைப்பற்றப்பட்ட பிரயோசனமான நிலையான ஆயுட் காலத்தைக் கொண்ட புலனாகாத சொத்துக்கள், ஒன்றுதிரட்டப்பட்ட கடன்தீர்ப்பு மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் நட்டங்களுக்கான செலவுகளின் மீது அளவிடப்படும்.

### (அ) அடையாளம் காணும் அடிப்படை

புலனாகாத சொத்துக்களை சொத்துக்களுக்காக பிரயோகிக்க முடியுமான எதிர்கால பொருளாதார நலன்கள் வியாபார நிறுவனங்களுக்கு பாய்ச்சப்படும் என்றும் ஏற்புடைய செலவுகள் திரண்ட குறைபாடுகள், நட்டங்கள் குறை செலவுகள் மீது நம்பிக்கையாக அளவீடு செய்து முன்னெடுத்துச் செல்ல முடியுமென அனுமானிக்கும் சந்தர்ப்பங்களிலுமே அடையாளம் காணப்படுகின்றன.

### (ஆ) பிந்திய செலவுகள்

காலம் கடந்த செலவுகள் மற்றும் குறிப்பிட்ட சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஏற்புடைய பிந்திய செலவுகள் மூலதனமாக்கப்படுகின்றன. உள்ளக ரீதியாக ஏற்படுத்தப்படும் நற்பெயருக்கு மற்றும் மதிப்புக்கு ஏற்புடைய செலவுகளும் உட்பட பிற அனைத்து செலவுகளும் செய்யப்படும் எனும் கருதுகோளின் அடிப்படையில் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகின்றது.

### (இ) ஓய்வு பெறச் செய்தல் மற்றும் அகற்றுதல்

புலனாகாத சொத்துக்களை அகற்றும் போது அல்லது பாவனையின் பின்னர் அகற்றும் போது எதிர்கால பொருளாதார நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாத போது அவை புலனாகாத சொத்துக்கள் என அடையாளம் காணப்படும்.

### (ஈ) கடன் தீர்ப்புச் செய்தல்

புலனாகாத சொத்துக்கள், அவை பாவனைக்கு எடுக்கப்பட்ட தினத்திலிருந்து அவற்றின் மதிப்பீட்டு பிரயோசனமுள்ள ஆயுட் காலத்திற்குள் எழிய நேர்கோட்டு வழிமுறைக்கு அமைய வருமான கூற்றுக்குள் அடையாளம் காணப்படும்.

### 2.4.5 பலவீனங்கள்

சபைக்குள்ள சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கணக்கு அளவுகள், ஏதேனும் சொத்தில் பலவீனம் அவதானிக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஐந்தொகை தினத்திலும் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான பலவீனங்கள் தென்படுமாயின் ஏற்புடைய சொத்திலிருந்து மீள அறவிடமுடியுமான பெறுமதியை மதிப்பீடு செய்யப்படும். ஏதேனும் பலவீன நட்டமொன்று அவதானிக்கப்படுவது ஏதேனும் சொத்தின் கொள்ளளவு பெறுமதி அல்லது அதன் பண உற்பத்தி பிரிவை மீண்டும் அறவிடுவதற்கு முடியுமான பெறுமதியை விஞ்சும் போதாகும். பலவீனங்கள் நட்ட வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

### 2.4.6 வர்த்தக மற்றும் வேறு வருமதிகள்

வர்த்தக மற்றும் வேறு வருமதிகள் பொதுவான வியாபார காலத்திற்குள் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது அவர்கள் சார்பில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்கு கிடைக்க வேண்டியுள்ள பணத்தொகைகளாகும்.அவற்றை சேகரித்துக்கொள்வதற்கு ஒரு வருட காலம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் வட்டத்திற்குள் அதற்கு மேலான காலம் செலவாகும் எனின்) அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

### 2.4.7 பொருள் பட்டியல்

பயன்படுத்தாத மற்றும் பழுதுபார்க்க முடியுமான வகைகளுக்கு ஏற்பாடுகள் செய்த பின்னர் பொருள் பட்டியல் செலவில் ஆகக் குறைந்த விலைக்கு மற்றும் தேறிய கண்டபலன் பெறுமதிக்கு கணக்கிடப்படும். தேறிய கண்டபலன் பெறுமதி என்பது சாதாரண வியாபார காலப்பிரிவுக்குள் பொருட்கள் பட்டியலை விற்பனை செய்ய முடியுமான விலை என்பதோடு நட்ட இருப்புக்கள் மற்றும் பழுதுபார்ப்பு இருப்புக்கள், இருப்புக்கள் அட்டவணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

### 2.4.8 நிதியும் நிதி சார்ந்தவைகளும்

நிதி மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றின் பணிகளுக்காக பணப் பெறுமதியை அறிந்துகொள்வதற்கு இலகுவாக மாற்றீடு செய்ய முடியுமான குறுகியகால உயர் திரவத்தன்மையுள்ள முதலீடுகள் கையிருப்பு தொகை மற்றும் நிதி சார்ந்தவைகள் என வரைவிலக்கணம் செய்யப்படும். நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் என்பது கையிருப்புத் தொகை மற்றும் வங்கி மேலதிகப் பற்று தவிர்ந்த ஏனைய நிதிகள், குறுகிய கால கடன் பெறுகைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் என்பன உள்ளடங்கும்.

### 2.4.9 நிதிப் பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கியல் தரங்கள் LKAS 07 (நிதிப் பாய்ச்சல் கூற்று) ஏற்ப மறைமுகமான பயன்பாட்டின் ஊடாக நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.4.10 ஊழியர் நலன்கள்

#### (அ) குறிப்பிட்ட நலத்திட்டம் - ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன்களுக்கான முறிகளுக்காக 2018 ஆம் ஆண்டு அமைப்பின் 135 ஊழியர்களை உள்ளடக்கிய குறிப்பிட்ட நலத்திட்டமாகும். இந்த திட்டத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் பொருட்டு ஆரம்ப வருடத்திலிருந்து முழுமையான ஒவ்வொரு வருடத்திற்கும் சகல ஊழியர்களினதும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட பெறுமதிக்கு சமமான தொகை ஐந்தொகையில் ஒதுக்கீடொன்றாக முன்கொண்டு செல்லப்படுகிறது. வருட ஆரம்பத்திலிருந்து முன்கொண்டு வந்த ஒதுக்கீடுகளில் ஏற்படும் வித்தியாசத்தின் குறைபாடு தொடர்பாக வருமானக் கூற்றில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஆ) குறிப்பிட்ட பங்களிப்புத் திட்டம்

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு உரிமைப் பெறுகின்றனர். ஊழியர்களின் நிகர சம்பளத்தின் அடிப்படையில் 12% உம் சபையினால் 3% உம் என்ற அடிப்படையில் முறையாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்யப்படும்.

### 2.4.11 கடன் பெற்றுக்கொள்ளல்

கடன் பெறுகைகள் அடிப்படையாக அடையாளம் காணப்படுவது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் அற்ற பொதுவான மதிப்பின் பிரகாரமாகும். எதிர் வரும் காலத்தில் விளைவுப் பயன் வட்டி முறையைப் பயன்படுத்தி தவணை முறைக் கடன் கரைப்பு செலவு அடிப்படையில் கடன்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தொகை (கொடுக்கல் வாங்கல்களின் செலவினம் தவிர்ந்த) மற்றும் விடுவித்துக்கொள்ளும் மதிப்புக்கு இடையில் காணப்படும் ஏதேனும் வித்தியாசம் இருப்பின் அதனை கடன் பெறுகை காலத்திற்குள் வருமான கூற்றில் காட்டப்படும்.

### 2.4.12 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

கடந்தகால நிகழ்வுகளின் பெறுபேறாக சட்டரீதியான / சம்பிரதாயபூர்வ முறியொன்று நடப்பு வருடத்தில் இருக்கும் போது பொறுப்புக்கள் மற்றும் ஓதக்கீடுகள் என்பன ஐந்தொகையில் இனங்காணப்படும். அவ்வாறான முறிகளை தீர்ப்பதன் மூலம் பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் தருனர் ஒருவரினால் வேண்டுகோள் விடுக்பகப்படும் போது அல்லது ஐந்தொகை தினத்திற்கு ஒரு வருடத்திற்குள்ளோ அல்லது செலுத்த வேண்டிய முறிகள் என்பன ஐந்தொகையில் நடப்பு பொறுப்புக்களாக குறிப்பிடப்படும். ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்தவேண்டிய பொறுப்புக்கள் ஐந்தொகையில் நடப்பு ஆண்டுக்கான பொறுப்பாக கணிக்கப்படும்.

### (அ) வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டியவைகள்

வர்த்தக செலுத்த வேண்டியவைகளாக சாதாரண வியாபார காலத்திற்குள் வழங்குநர்களுக்கு பொருட்களுக்கு அல்லது அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவை ஒன்றுக்கு செலுத்துவதற்குள்ள பொறுப்புக்களின் பெறுமதியாகும். அவை செலுத்தப்பட வேண்டிய காலம் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவாக செலவாகும் என உத்தேசிக்கப்படுமிடத்து (பொதுவான வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளின் வட்டத்திற்குள் அதற்கு மேலான காலம் செலவாகும் எனின்) அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறல்லாத போது அவை நடைமுறை சொத்துக்களின் கீழ் வகையீடு செய்யப்படும்.

அனுப்பப்படும் இருப்புக்கள் உள்ளிட்ட அனைத்து கொள்வனவுகளுக்கும் பொருட்கள் கிடைக்கப்பெறுவதை பதியும் போது கணக்கேடுகளில் பொறுப்புக்களை அறிக்கையிடும் கொள்கை லக்சல நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டுள்ளது. ஆயினும் அனுப்பப்படும் இருப்புக்கள் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் பொருள் அனுப்பும் கடன்தருநர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

### 2.4.13 வருமான வரி

தற்போதுள்ள வருமான வரி அறவிடுவது கணக்கிடப்படுவது கம்பனியினால் வரி வருமானத்தை செயற்படுத்தி உருவாக்கும் போது கம்பனியின் நிதி நிலமை பற்றிய கூற்றின் திகதிக்கு நாட்டில் அமுலிலுள்ள அல்லது போதியளவு விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாகும். பயன்படுத்தப்படும் வரிக் கட்டளைகளின் பொருள்கோடல்களுக்கு உட்பட்ட நிலமைகளுக்கு ஏற்புடையதாக வரி அறிக்கைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் தவணை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதோடு, வரி அதிகாரபீடங்களுக்கு செலுத்தவேண்டுமென உத்தேசிக்கப்படும் பணத் தொகையின் அடிப்படையில் ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படும்.

### 2.4.14 வருமானங்களை இனம்காணல்

வருமானம் இனம்காணப்படுவது பொருட்கள் விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற பணத்தின் சாதாரண பெறுமதி வரையிலாகும். அத்தோடு பொருளாதார நலன்கள் இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபைக்கு கிடைக்கும் என்ற அநுமானத்தின் பேரிலாகும். மேலும் வருமானம் மற்றும் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட வேண்டியுள்ள செலவினங்களை நம்பகமான முறையில் கணக்கிட முடியும் என்றிருந்தால் மாத்திரமாகும். வருமானம் கணக்கிடப்படுவது வியாபாரக் கழிவுகள், நலன்கள் மற்றும் ஏற்புடைய வரி தவிர்ந்த கிடைக்கப்பெற்ற அல்லது வருமதியாக உள்ளவற்றை கருத்திற்கொண்டாகும்.வருமானத்தை இனம்காணும் பொருட்டு பின்வரும் குறித்துரைக்கப்பட்ட நியதிகளையும் பூரணப்படுத்தல் வேண்டும்.

### பொருட்கள் விற்பனை

பொருட்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம், பெறப்பட்ட மற்றும் பெறவேண்டிய தேறிய இலாபம், விற்பனை கழிவுகள் மற்றும் கொள்ளளவுகளின் சாதாரண பெறுமதிக்கு அளவிடப்படும். விசேட ஆபத்துக்கள் மற்றும் உரிமை நலன்கள் கொள்வனவு செய்பவருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருக்கும் போது, அறவிடுவதற்கு முடியுமாக உள்ள போது சார்புச் செலவு மற்றும் பொருட்கள் மீண்டுவரும் அறிக்கைகள் நம்பிக்கையாக மதிப்பீடு செய்ய முடியுமான சந்தர்ப்பத்தில் மற்றும் பொருட்கள் தொடர்பாக தொடர்ச்சியான முகாமைத்துவ தலையீடு இல்லாத போது வருமானம் அடையாளம் காணப்படும். ஆபத்துக்கள் மற்றும் நன்மைகளைப் பொறுப்பளித்தல் விற்பனை ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நிபந்தனைகளின் மீதும் தங்கி நின்று மாறுபடுகின்றது.

### வேறு செயற்பாட்டு வருமானம்

(அ) சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாப நட்டங்கள்

(ஆ) சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்கள் அகற்றுதல் மற்றும் நீக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபம் அல்லது நட்டங்கள் ஏற்புடைய விற்பனை நிகழும் காலப்பிரிவில் இனம்காணப்படுவதோடு அவை ஏனைய செயற்பாட்டு வருமானங்களாக வகைபடுத்தப்பட்டுள்ளன.

### கிடைக்கப்பெற்ற கொடைகள்

அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடைகள் செலவின விடயத்திற்கு ஏற்புடையதாயின் அது செலவை சீராக்கம் செய்வதற்கு தேவையான காலப்பகுதியில் இழப்பீடு வழங்கப்படும் என்ற அடிப்படையில் இனம்காணப்படும். ஏற்புடைய கொடை சொத்தொன்றுடன் தொடர்புபடுமாயின் சாதாரண பெறுமதி பின்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் உத்தேச நடைமுறைக்கேற்ற ஆயுட்காலம் பூராகவும் சமமான தவணைக் கட்டணங்களில் வருமானக்கூற்றிற்கு செலுத்தப்படும்.

### கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள்

கிடைக்கப்பெற்ற மூலதனக் கொடைகள் பின்போடப்பட்ட வருமானங்களாக இனம்காணப்பட்டுள்ளதோடு 10 வருட காலப் பிரிவு பூராவும் கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

### கிடைக்கப்பெற்ற மீண்டுவரும் கொடைகள்

வருமானம் மற்றும் ஏற்புடைய கொடைகள் வேறு வருமானங்களாக தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு அல்லது ஏற்புடைய வருமானங்கள் மூலம் அறவீடு செய்வதற்கும் முடியும்.

### 2.4.15 செலவுகளை இனம்காணல்

நிதிக் கூற்றுக்களில் செலவினங்கள் இனம்காணப்படுவது செய்யப்பட்ட செலவினம் மற்றும் குறிப்பிட்ட வருமான விடயங்களுக்கு இடையிலுள்ள உழைப்புக்கள் ஆகியவற்றுக்கு இடையிலுள்ள நேரடி தொடர்பின் அடிப்படையிலாகும். வினைத்திறனுடனான வியாபாரத்தைப் பேணிவருவம் போதும் சொத்துக்கள் ஆலைகள் மற்றும் பொறிகளை பராமரிக்கின்ற போதும் ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருமானக் கூற்றில் அறவீடுகளாக காட்டப்பட்டுள்ளது.

வருமானக் கூற்றை சமர்ப்பிக்கும் செயற்பாட்டுக்காக கம்பனியின் மற்றும் குழுமத்தின் செயலாற்றுகைக்கு உரிய அடிப்படைகள் அதன் மூலம் நியாயமாக எடுத்துக்காட்டப்படும் என்ற அடிப்படையில் செலவினத்தின் செயற்படுத்தல் முறை பின்பற்றப்பட்டுள்ளது.

### (அ) மீண்டுவரும் செலவுகள்

வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படி சபையினால் உழைக்கப்படும் இலாபம் யாதெனில், சகல அறிந்த பொறுப்புக்களுக்காக மற்றும் சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்கள் முறையே தேய்வுக்கான ஒதுக்கீடுகளை வழங்கிய பின்னர் மீதமாகும் தொகையாகும்.

### (ஆ) மூலதனச் செலவுகள்

வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவோ அல்லது வியாபாரத்தின் உழைப்புக் கொள்ளளவை உயர்த்துவதற்கு நிரந்தரமான நிலைமையை கொண்ட சொத்துக்களை விரிவுபடுத்துவதற்கோ அல்லது விருத்தி செய்வதற்காகவோ செலவிடப்பட்ட செலவுகள் மூலதனச் செலவுகளாக கொள்ளப்பட்டுள்ளன.

சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்களை அகற்றும் போது கிடைக்கும் வருமானங்கள் எனும் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் வருமான கூற்றினுள் கணக்கிடப்பட்டுள்ளது.

### (ஆ) பின்போடப்பட்ட மேலதிகக் கட்டணச் செலவுகள்

சபையை மீளமைப்புச் செய்யும் செயன்முறையின் ஒரு பகுதியாக மீளாய்வுக்குரிய வருடத்தினுள் "P E D 10" கீழ் சுயவிருப்ப ஓய்வூபெறுகைக்கு ஊழியர்கள் 20 பேர் சம்மதித்தனர். அவர்களுக்காக ரூபா. 10ල432ල332ග25 தொகை செலவிடப்பட்டது. இந்தச் செலவு எஞ்சிய சேவைக் காலத்திற்காகவும் விடப்படுவதற்கு கணக்குக் கொள்கையொன்று பின்பற்றப்பட்டது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஊழியர்களுக்காகவும் செலவிடப்பட்ட தொகை சமனான அடிப்படையில் அவர்களது சேவைக் காலப்பகுதிக்குள் விரிவடையச் செய்யப்பட்டுள்ளது.

### 2.4.16 கடன் பெறுகை செலவுகள்

கடன் பெறுகைச் செலவுகள் அவை செலவிடப்படும் வருடத்தில் ஒரு செலவாக கணக்கிடப்படும்.

### 2.4.17 முறிகள் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள்

சபையின் கட்டுப்பாட்டுக்கு வெளியே நடைபெறும் கடந்தகால நிகழ்வொன்று காரணமாக எழக்கூடிய நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் நிகழுதல் அல்லது நிகழாதிருத்தல் காரணமாக மாத்திரம் உறுதிப்படுத்தப்படும் மறைமுக சொத்துக்கள் மற்றும் முறிகள் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் ஆகின்றன.

### 2.4.18 ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழ்ந்தவை

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் நிகழும் சகல குறிப்பிடத்தக்க சம்பவங்களும் ஏற்புடைய சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டு செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| 3. வருமானம் | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| காட்சியறை விற்பனைகள் | | |
| தும்முல்லை | 314,092,034 | 326,117,671 |
| நூதனசாலை | 93,089,687 | 77,726,202 |
| காலி | 67,105,575 | 59,482,530 |
| பேராதனை | 62,476,801 | 69,474,446 |
| கட்டுநாயக்க | 42,980,562 | 54,935,264 |
| கோட்டை | 27,723,597 | 25,334,213 |
| வெலிபன்ன 1 | 26,942,621 | 20,923,586 |
| பத்தரமுல்லை | 21,321,945 | 22,398,837 |
| கண்டி | 20,912,924 | 21,032,749 |
| கட்டுபெத்த | 16,061,827 | 17,418,404 |
| பின்னவலை | 14,247,433 | 13,665,475 |
| விசேட பொருட்கள் | 11,993,455 | 6,453,803 |
| ரேஸ்கோஸ் | 3,859,365 | 10,502,420 |
| நுவரெலியா | 847,604 | - |
| **மொத்த காட்சியறை விற்பனைகள்** | 723,655,430 | 725,465,600 |
| நேரடி / சேவைப் பெறுநர் விருப்பத்தின் மீதான கோரல்கள் | 17,855,513 | 36,137,275 |
| | **741,510,943** | **761,602,875** |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | (4,227,910) | (6,177,319) |
| | **737,283,033** | **755,425,556** |

ரேஸ்கோர்ஸ் கிளையினால் தொடர்ச்சியாக அனுபவித்துவந்த நட்டம் காரணமாக அங்குள்ள காட்சியறையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2018 செப்டம்பர் மாதத்தில் நிறைவுசெய்யப்பட்டன.

| **4. வேறு வருமானங்கள்** | | |
|---|---|---|
| வாடகை வருமானம் | 11,786,674 | 10,048,825 |
| சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி | 50,318 | - |
| சுற்றுலா விடுதிகளை ஒதுக்கிக்கொள்ளல் | 2,500 | 151,500 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | 12,052 | 449,932 |
| | **11,851,544** | **10,650,257** |

| **5. நிதிச் செலவினம்** | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 378,449 | 388,862 |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 95,374 | 1,422,599 |
| கடனுக்கான வட்டி | 50,815,340 | 68,609,780 |
| | **51,289,163** | **70,421,241** |

## இலங்கைக் கைப்பணிப் பொருட்கள் சபை

### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 6. முன்கூட்டிய வரி வருமானம்

பின்வரும் செலவுகள் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அறவிட்ட பின்னர் முன்கூட்டிய வருமானம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பணிப்பாளர்கள் கட்டணங்கள் மற்றும் கூட்ட செலவுகள் | 1,273,960 | 1,469,870 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,568,720 | 300,000 |
| கணக்காய்வு அல்லாத சேவைகள் - வேறு | - | 1,487,863 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மீதான தேய்வு | 24,329,922 | 28,398,039 |
| ஊழியர்படை செலவினம் | | |
| குறிப்பிட்ட பங்களிப்புத் திட்டத்தின் செலவு | 9,818,356 | 9,701,142 |
| குறிப்பிட்ட நலன் திட்டத்தின் செலவு | 6,704,212 | 6,467,126 |
| சம்பளமும் கொடுப்பனவும் | 115,989,192 | 114,157,341 |
| ஆளணிப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள் | 201,500 | 279,000 |
| சட்ட கட்டணங்கள் | 1,328,213 | 672,342 |
| தொழிற்பாட்டு குத்தகைக் கூலி | 44,555,559 | 52,124,454 |
| அனுசரணை மற்றும் கொடைகள் | 268,778 | 780,493 |

### 7. வரி

நிறுவனத்தின் சட்டமுறையான தன்மை, சிக்கல்கள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விசேட தன்மையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையின் வரிப் பொறுப்புக்களின் தன்மையை விலைமதிப்புச் செய்ய வேண்டியது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் சேர்ந்து மேற்கொள்ளும் அறிவுரை உசாவுகளை அடிப்படையிலாகும். எவ்வாறெனினும், நடப்பாண்டில் நிகழும் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடைய ஆண்டுக்காக ரூ. 5,149,400 வரி ஒதுக்கீட்டை வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

**இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை**

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**8. ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | குறிப்புகள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| அறுதிச் சொத்துக்கள் | 8.1 | 746,074,570 | 768,287,339 |
| கட்டிட அபிவிருத்திச் செலவு | 8.2 | 247,038,787 | 272,378,787 |
| | | **993,113,357** | **1,040,666,126** |

8.1 அறுதிச் சொத்துக்கள்

| | காணி | கட்டிடங்கள் | பொறிகள் மற்றும் உபகரணங்கள் | தளபாடங்கள் பொருத்தல் மற்றும் அலுவலக உபகரணங்கள் | கணினி உதிரிப்பாகங்கள் | பெருட்கள் | முடிவுறா மூலதன வேலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **செலவு மற்றும் விலைமதிப்பு பெறுமதி** | | | | | | | | |
| 2017 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 395,520,000 | 248,686,043 | 97,920,287 | 58,733,049 | 30,162,658 | 28,745,527 | 45,451,390 | **905,218,954** |
| கூட்டல்கள் | - | 101,717 | 2,647,183 | 242,316 | 461,445 | 1,765,648 | - | **5,218,309** |
| பணக்கையாடல் | | | | | | | | - |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **395,520,000** | **248,787,760** | **100,567,470** | **58,975,365** | **30,624,103** | **30,511,175** | **45,451,390** | **910,437,263** |
| கூட்டல்கள் | 517,214 | 10,000 | 34,250 | 694,808 | 262,305 | 598,575 | - | **2,117,152** |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **396,037,214** | **248,797,760** | **100,601,720** | **59,670,173** | **30,886,408** | **31,109,750** | **45,451,390** | **912,554,415** |
| **ක්ෂයවීම** | | | | | | | | |
| 2017 ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | - | 22,652,373 | 34,627,445 | 22,680,172 | 23,121,906 | 10,669,989 | - | **113,751,885** |
| வருடத்திற்கான அறவீடுகள் | - | 4,992,742 | 8,440,660 | 5,893,284 | 6,041,194 | 3,030,159 | | **28,398,039** |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | - | 27,645,115 | 43,068,105 | 28,573,456 | 29,163,100 | 13,700,148 | - | **142,149,924** |
| வருடத்திற்கான அறவீடுகள் | - | 4,995,281 | 10,058,905 | 5,905,043 | 309,602 | 3,061,090 | | **24,329,921** |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **-** | **32,640,396** | **53,127,010** | **34,478,499** | **29,472,702** | **16,761,238** | **-** | **166,479,845** |
| **ඉදිරියට ගෙනයන මුදල් ප්‍රමාණ** | | | | | | | | |
| 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | 395,520,000 | 221,142,645 | 57,499,365 | 30,401,909 | 1,461,003 | 16,811,027 | 45,451,390 | 768,287,339 |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **396,037,214** | **216,157,364** | **47,474,710** | **25,191,674** | **1,413,706** | **14,348,512** | **45,451,390** | **746,074,570** |

**8.2 கட்டிட அபிவிருத்திச் செலவு**

| | 2018 | 2017 |
|---|---|---|
| **செலவு அல்லது பிற்போடப்பட்ட செலவு** | ரூ. | ரூ. |
| ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 384,452,630 | 384,452,630 |
| **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | 384,452,630 | 384,452,630 |
| **கடன் கழிப்பு** | | |
| ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | **112,073,843** | 89,112,939 |
| வருடத்திற்கான அறவீடுகள் | 25,340,000 | 22,960,904 |
| **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **137,413,843** | 112,073,843 |
| **முன்கொண்டு செல்லப்பட்ட பணத்தின் அளவு** | | |
| ஜனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 272,378,787 | 295,339,691 |
| **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **247,038,787** | 272,378,787 |

கட்டிட அபிவிருத்திச் செலவு கடன் கழிப்பு செய்தலை துரிதப்படுத்துவதற்காகவும் வருடத்திற்கான ரூ.25,340,000 தொகை (2017 ரூ.25,340,000) மூலதன வழங்கல்கள் பிற்போடப்பட்ட வருமானங்களை அறவீட்டுடன் சமப்படுத்துவதற்காக கட்டிட அபிவிருத்திச் செலவு கடன் கழிப்பு ரூ.2,379,096 ரூபா இனால் அதிகரிக்கப்பட்டது.

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

8.2 கட்டிட அபிவிருத்திச் செலவு மேலும்

கடன் கழிப்பு

| நிலையம் | வருடம் | எழுந்த செலவு | வீதம் | 2018 ஜனவரி 01 ஆம் திகதிக்கு திரண்ட கடன்கழிப்பு மீதி | 2018 வருடத்தினுள் கடன்கழிப்பு செய்யப்பட்ட அளவு | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு திரண்ட கடன்கழிப்பு மீதி | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டிட அபிவிருத்தி செலவில் முன்கொண்டு செல்லப்பட்ட காசு அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| நூதனசாலை | 2013 | 172,847,765 | | | | | |
| நூதனசாலை | 2014 | 1,881,295 | | | | | |
| நூதனசாலை | 2015 | 389,177 | | | | | |
| மொத்தம் | | 175,118,237 | 6% | 43,646,555 | 10,101,214 | 53,747,769 | 121,370,468 |
| பத்தரமுல்லை | 2013 | 117,704,905 | | | | | |
| பத்தரமுல்லை | 2014 | 7,119,771 | | | | | |
| பத்தரமுல்லை | 2015 | 9,744,207 | | | | | |
| மொத்தம் | | 134,568,883 | 6% | 32,311,811 | 7,762,237 | 40,074,048 | 94,494,835 |
| பின்னவலை | 2013 | 10,086,000 | 10% | 5,043,000 | 1,008,600 | 6,051,600 | 4,034,400 |
| வாகொல்லை | 2014 | 810,487 | 10% | 324,193 | 81,049 | 405,242 | 405,245 |
| பேராதனை | 2013 | 31,657,966 | | | | | |
| பேராதனை | 2014 | 8,968,353 | | | | | |
| பேராதனை | 2015 | 677,220 | | | | | |
| மொத்தம் | | 41,303,539 | 10% | 19,619,490 | 4,130,354 | 23,749,844 | 17,553,695 |
| வெலிபென்ன | 2013 | 10,269,019 | 10% | 5,134,511 | 1,026,902 | 6,161,413 | 4,107,606 |
| ரேஸ்கோர்ஸ் | 2013 | 1,113,613 | 10% | 556,804 | 111,361 | 668,165 | 445,448 |
| கட்டுநாயக்க | 2013 | 1,060,000 | 10% | 530,000 | 106,000 | 636,000 | 424,000 |
| உனவட்டுன | 2013 | 1,000,000 | 10% | 500,000 | 100,000 | 600,000 | 400,000 |
| கே - சோன் | 2013 | 8,353,071 | 10% | 4,176,535 | 835,306 | 5,011,841 | 3,341,230 |
| தும்முல்லை | | 769,781 | 10% | 230,944 | 76,977 | 307,921 | 461,860 |
| **முழு மொத்தம்** | | **384,452,630** | | **112,073,843** | **25,340,000** | **137,413,843** | **247,038,787** |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| 9. பொருட்கள் வகை | குறிப்புகள் | 2018<br>ரூ. | 2017<br>ரூ. |
|---|---|---|---|
| முன்னணி தரத்திலான உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்யும் காட்சியறைகள் | | 443,175,876 | 570,105,686 |
| இருவகைப் பாவனை தயாரிப்பு பொருட்கள் | | 14,810,411 | 5,839,706 |
| மூலப் பொருட்கள் மற்றும் செய்யப்படும் வேலைகள் | 9.1 | 5,397,990 | 3,003,603 |
| | | **463,384,277** | 578,948,995 |

**9.1 மூலப் பொருட்கள் மற்றும் செய்யப்படும் வேலைகள்**

மூலப் பொருட்கள் மற்றும் நடைபெற்றுவரும் வேலைகள், சேவைப் பெறுநர் விருப்பத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்டுவரும் நேரடி கட்டளைகளுக்காக தயாரிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டுள்ளது.

| 10. வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவைகள் | குறிப்புகள் | 2018<br>ரூ. | 2017<br>ரூ. |
|---|---|---|---|
| வர்த்தக கிடைக்க வேண்டியவை | | 38,689,773 | 45,383,910 |
| வேறு கிடைக்க வேண்டியவை | 10.1 | 6,367,938 | 4,477,411 |
| வைப்புக்கள் மற்றும் முன்கூட்டிய கொடுப்பனவுகள் | 10.2 | 38,000,723 | 82,456,827 |
| ஏற்புடைய கம்பனிகளினால் கிடைக்க வேண்டியவை | 10.3 | 25,660,481 | 64,146,044 |
| | | **108,718,915** | 196,464,192 |
| **10.1 வேறு கிடைக்க வேண்டியவை** | | | |
| ஆளணிக் கடன் | | 113,750 | 161,250 |
| கிடைக்க வேண்டிய வாடகை | | 315,000 | 1,988,169 |
| கிடைக்க வேண்டிய சேவைக் கட்டணம் | | 5,939,188 | 2,252,357 |
| கிடைக்க வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | | - | 64,765 |
| வவுச்சர் பத்திரங்கள் விற்பனையால் கிடைக்க வேண்டியவை | | - | 10,870 |
| | | **6,367,938** | 4,477,411 |
| **10.2 வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுனகள்** | | | |
| பிணை வைப்புக்கள் | | 1,849,424 | 1,925,446 |
| முன் கொடுப்பனவுகள் | | 8,993,600 | 16,531,699 |
| செலுத்தப்பட்ட முற்பணங்கள் | | 11,932,359 | 13,150,649 |
| பாதிக்கப்பட்ட கையிருப்பு கட்டுப்பாட்டுக் கணக்கு | | - | 19,851,106 |
| தடுத்து வைக்கப்பட்ட கொள்வனவு தொகை | | 500,000 | 12,502,564 |
| மீண்டும் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | | 14,715,340 | 17,834,049 |
| விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் | | - | 77,993 |
| கிடைக்க வேண்டிய பிணைகள் | | 10,000 | 583,321 |
| | | **38,000,723** | 82,456,827 |
| **10.3 ஏற்புடைய கம்பனிகளிலிருந்து கிடைக்க வேண்டியவை** | | | |
| கருத்திட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை | | - | 38,485,563 |
| அபே கம மூலம் கிடைக்க வேண்டிய தொகை | | 25,660,481 | 25,660,481 |
| | | **25,660,481** | 64,146,044 |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **11. காசும் அதற்கு சமமானவையும்** | | |
| வங்கியிலுள்ள காசு | 22,832,694 | 4,622,369 |
| கையிலுள்ள காசு | 1,618,606 | 4,848,307 |
| | **24,451,300** | **9,470,676** |
| **12. வருமான கையிருப்புக்களின் வேறு அம்சங்கள்** | | |
| ஆரம்ப மீதி | 38,180,995 | 35,648,094 |
| நிலுவை சம்பளம் | - | 2,644,485 |
| முன்னைய வருட மீளாய்வு | 139,836,768 | (111,584) |
| | **178,017,763** | 38,180,995 |

வருமான கையிருப்புக்களில் வேறு அம்சங்களுக்கு திரண்ட வருமானக் கையிருப்புக்கள் மூலம் எதிர்காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் உள்ளடக்கப்பட்ட முன்கூட்டிய காலப்பகுதிக்கான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **13. ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள்** | | |
| ஆரம்ப மீதி | 38,062,261 | 33,987,980 |
| வருடத்திற்கான பணிக்கொடை நிதி ஒதுக்கீடு | 6,704,212 | 6,467,126 |
| வருடத்தில் செலுத்தப்பட்ட பணிக்கொடை நிதி ஒதுக்கீடு | (574,994) | (2,392,845) |
| இறுதி மீதி | **44,191,479** | 38,062,261 |

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் கீழ் ஓய்வூதிய நலன் பொறுப்புகள் நிறுவனத்தின் 135 ஊழியர்களை உள்ளடக்கிய வகையில் குறித்துரைக்கப்பட்ட நலன் திட்டமொன்றாகும்.

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

14. பின்போடப்பட்ட வருமானம்

வழங்கல் பற்றிய விபரம்

| | வருடம் | கடன் கழிப்பு வீதம் | ஆரம்பத்தில் பெற்ற ஒதுக்கீடு | 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கடன் கழிப்பு செய்யப்படாத மீதி | 2018 ஆம் ஆண்டில் கடன் கழிப்பு அளவு | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கடன் கழிப்பு செய்யப்படாத மீதி |
|---|---|---|---|---|---|---|
| பொருளாதார அபிவிருத்தி | **2012** | 10% | 100,000,000 | 40,000,000 | 10,000,000 | 30,000,000 |
| வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | **2013** | 10% | 36,000,000 | 18,000,000 | 3,600,000 | 14,400,000 |
| வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி ஒதுக்கீடு | **2013** | 10% | 10,224,643 | 5,112,321 | 1,022,464 | 4,089,857 |
| வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி ஒதுக்கீடு | **2013** | 10% | 42,109,637 | 25,265,782 | 4,210,964 | 21,054,818 |
| வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி ஒதுக்கீடு | **2013** | 10% | 11,099,920 | 5,549,960 | 1,109,992 | 4,439,968 |
| வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி ஒதுக்கீடு | **2013** | 10% | 7,828,426 | 3,914,216 | 782,843 | 3,131,373 |
| பொருளாதார அபிவிருத்தி | **2014** | 10% | 35,000,000 | 21,000,000 | 3,500,000 | 17,500,000 |
| வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி ஒதுக்கீடு | **2014** | 10% | 11,137,374 | 6,682,434 | 1,113,737 | 5,568,697 |
| **மொத்தம்** | | | **253,400,000** | **125,524,713** | **25,340,000** | **100,184,713** |

# இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 2018 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|---|
| **15. நீண்டகால கடன் பெறுகை** | | | |
| ஆரம்ப மீதி | | 364,484,161 | 442,592,787 |
| வருடத்தினுள் பெற்றுக்கொண்ட கடன் | | 11,700,000 | 38,300,000 |
| வருடத்தில் செலுத்திய கடன் | | (72,254,789) | (116,408,626) |
| இறுதி மீதி | | 303,929,372 | 364,484,161 |
| (கழி) வருடமொன்றில் செலுத்த வேண்டிய கடன் | 17 | (139,319,028) | (166,655,770) |
| **நீண்டகால கடன் பொறுப்புக்கள்** | | **164,610,344** | **197,828,391** |

### 15.1 இலங்கை வங்கி - ரூ.மில். 950

சுழற்சிக் கடன் அடிப்படையில் வழங்கல் தரப்பினருக்கு கொடுப்பனவு செலுத்துவதற்கு இலங்கை வங்கியினால் ரூ.மில். 150 கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர் அந்த கடன் வசதி ரூ.மில். 125 வரை குறைக்கப்பட்டது. நிர்மாணச் செலவுகளை ஈடுசெய்வதற்காக செயற்பாட்டு மூலதன தேவைப்பாடுகளை நிதியீட்டம் செய்வதற்காக ரூ.மில். 300 வேறு கடன் தொகையொன்று மேலும் பெற்றுக்கொள்ளப்பட்டது. ரூ.மில். 497 பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டிருந்த கொழும்பு கோட்டடையிலுள்ள கட்டிடத்தை இலங்கை வங்கியில் ஈடுவைத்து அந்தத் தொகைப் பெறப்பட்டது.

### 15.2 இலங்கை வங்கி - ரூ.மில்.50 (மேலதிக கடன் கோரல்)

செயற்பாட்டு மூலதனம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கை தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியிலிருந்து ரூ.மில்.50 கடன் தொகை கோரப்பட்ட போதிலும் அதில் ரூ.மில்.38.3 தொகை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடிந்தது. எஞ்சிய ரூ.மில்.11.7 தொகை 2018 ஆம் ஆண்டிலேயே கிடைக்கப்பெற்றது.

### 15.3 கிராமிய அபிவிருத்தி வங்கி - ரூ.மில். 200

அவசர செயற்பாட்டு தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு கிராமிய அபிவிருத்தி வங்கி களணிக் கிளையிலிருந்து ரூ.200 கடன் வசதி பெற்றுக்கொள்ளப்பட்டது. பொது திறைசேரியினால் ஏற்புடைய கடன் வசதிகளை ஒழுங்குசெய்து தருவதனால் அதற்காக லக்சல நிறுவனத்தினால் எவ்வித பிணைப் பணமும் வைக்கப்படவில்லை.

### 15.4 பொது திறைசேரிக் கடன் - ரூ.மில். 15

வழங்குநர்களின் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கு 0 % வீதத்தில் அரசாங்க பொது திறைசேரியிலிருந்து ரூ.மில். 15 கடன் வசதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

# இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **16. வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டியவை** | | | |
| வர்த்தக செலுத்திய வேண்டியவை | | 392,544,616 | 374,200,441 |
| வேறு செலுத்த வேண்டியவை | | 101,510,827 | 150,171,130 |
| திரண்ட செலவினம் | | 29,991,428 | 28,494,347 |
| | | **524,046,871** | **552,865,918** |
| **17. குறகியகால கடன் பெறுகை** | | | |
| நீண்டகால கடன் பொறுப்புக்கள் நடப்பு பகுதி | | 139,319,028 | 166,655,770 |
| குறுகியகால கடன் | | 136,069,359 | 131,944,487 |
| | | **275,388,387** | **298,600,257** |
| **18. வங்கி மேலதிகப் பற்று** | | | |
| வங்கி மேலதிகப் பற்று | | **15,891,004** | **29,067,244** |

ரூ.15,891,004 என கணக்கிடப்பட்டுள்ள வங்கி மேலதிகப் பற்று (2017 - ரூ.29,067,244) என்பது வருட இறுதியில் காசேட்டில் காண்பிக்கப்படும் மீதியாகும். இலங்கை வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூ.மில்.125 தற்போதைய சுழற்சிக் கடன் தொகை தவிர்ந்த லக்சல நிறுவனத்திற்கு வேறு வங்கி மேலதிகப் பற்றுக்கள் இல்லை. (தயவுசெய்து குறிப்பு 15 ஐப் பார்க்க)

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**19. எதிர்பாரா பொறுப்புக்கள்**

**சபைக்கு எதிரான தீர்ப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகள்**

| நீதிமன்ற வழக்கு இலக்கம் | வழக்கு தொடுக்கப் பட்ட திகதி | வழக்கு தொடுத்தவர் யார் என்பது பற்றி | வழக்கின் தன்மை | தற்போதைய நிலமை |
|---|---|---|---|---|
| DMR/0280/13 | 2015 ஜுலை 13 | கோட்டை மாநகர சபை | கோட்டை மாநகர சபையினால் லக்சல நிறுவனத்திற்கு எதிராக சூரிய மின் கலம் பொருத்துதல் தொடர்பில் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு | ரூ.4,020,000 தொகை அதன் வட்டியுடன் சேர்த்து கோட்டை மாநகர சபைக்கு செலுத்துமாறு தீர்பொன்று வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், லக்சல நிறுவனத்தினால் இந்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீ செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருப்பதனால் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்தவேண்டியதாக குறிப்பிட்டு அதற்குச் சமமான தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| DMR/2255/16 | 2016 மே 09 | வரையறுக்கப்பட்ட டீமோ கம்பனி | உரிய மீதித் தொகைகளை கொடுப்பனவு செய்யாத காரணத்தினால் டீமோ கம்பனியினால் லக்சல நிறுவனத்திற்கு எதிராக ஏற்புடைய ஒப்பந்தங்களை மீறியது தொடர்பில் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு | தீர்ப்பு இது வரையில் கிடைக்கப்பெறவில்லை. அதற்குரியதாக எதிர்பார்க்கப்படும் எந்தவித பொறுப்பும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இல்லை. |
| 138/2018/MR | 2018 மார்ச் 08 | வரையறுக்கப்பட்ட ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பனி | லக்சல நிறுவனத்தினால் சுற்றுலா சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பனிக்கு வழங்கப்பட்ட உப ஒப்பந்தத்திற்கு ஏற்புடைய உடன்படிக்கை மற்றும் அதற்காக செலுத்த வேண்டியுள்ள ரூ. 8,184,683.49 தொகை தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு | சட்டமா அதிபர் திணைக்களம் லக்சல நிறுவனம் (இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை) சார்பாக ஆட்சேபனை தொடுக்கப்பட்டது. |
| 139/2018/MR | 2018 ஏப்ரல் 10 | வரையறுக்கப்பட்ட ஜெட் ஹோல்டிங்ஸ் கம்பனி | லக்சல நிறுவனத்தினால் உலக வர்த்தக மைய கட்டிடத்தின் 22 ஆம் மாடியின் அமைந்துள்ள பிணக்கு இணக்க நிலையத்தை புனரமைப்பதற்கு நீதி அமைச்சுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. லக்சல நிறுவனத்தினால் இந்த நடவடிக்கையை உப ஒப்பந்தமாக ஜெட் ஹோல்டிங்க்ஸ் கம்பனிக்கு வழங்கப்பட்டதோடு, அந்த கம்பனியினால் புனர்நிர்மாண வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. ஆயினும், நீதி அமைச்சினால் ஜெட் ஹோல்டிங்க்ஸ் கம்பனிக்கு செலுத்த வேண்டிய அப்பணிக்கான எஞ்சிய தொகையை செலுத்தியிருக்கவில்லை. எனவே, ரூ.32,256,980 தொகையை செலுத்தாத காரணத்தினால் வரையறுக்கப்பட்ட ஜெட் ஹோல்டிங்க்ஸ் கம்பனியினால் லக்சல நிறுவனத்திற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. | சட்டமா அதிபர் திணைக்களம் லக்சல நிறுவனம் (இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை) சார்பாக ஆட்சேபனை தொடுக்கப்பட்டது. |

**உள்ளக விசாரணை**

இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையின் 2015 ஆம் ஆண்டு பணித்தடை செய்யப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருவருக்கு எதிராக உள்ளகப் விசாரணை நடைபெறுகின்றது.

**இலங்கை கைப்பணிகள் சபையின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், வேறு சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.**

---

**1.** நிதிக் கூற்றுகள்

1.1 மறுதலிப்பு அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் **2018** ஆம் ஆண்டு திசெம்பர் **31** ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப் படுத்தியுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக சபையின் **2018** ஆம் ஆண்டு திசெம்பர் **31** ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ).** மீளாய்விற்கான ஆண்டில் சபையால் SAP கணினிமயப்படுத்திய கணக்கீட்டு முறையில் பேணிச் சென்ற பணப் பேரேடில் நாட் குறிப்புகளை பயன்படுத்தி கொடுக்கல் வாங்க-ல்களை கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன்படி **7264** ஆம் இலக்க நடைமுறை கணக்கு பொருட்டு பேணிச் சென்ற பணப் பேரேடில் 24 நாட் குறிப்புகளை பயன்படுத்தி பற்று அல்லது வரவு மொத்த பெறுமதி ரூபா.**7,155,350** ஆன கொடுக்கல் வாங்கல் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், 6526 ஆம் இலக்க நடைமுறை கணக்கிற்கு ஏற்புடையதான பணப் பேரேடில் 40 நாட் குறிப்புகளை பயன்படுத்தி பற்று அல்லது வரவு மொத்த பெறுமதி ரூபா.**32,221,464** ஆன கொடுக்கல் வாங்கல் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) **2018** ஆம் ஆண்டு திசெமபர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றுடனான பணிக்கொடை ஒதுக்கீடு அட்டவணைப்படி மொத்த பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதி

ரூபா.**43,633,230** ஆயினும், அன்றைய திகதியில் பேரேடுபடி பணிக்கொடை ஒதுக்கீடுகளின் பெறுமதி ரூபா.**43,319,441** ஆதல் காரணமாக பேரேடுபடி பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா.**313,789** ஆல் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் விசேட பொருட் கட்டளைகளின்மீது விற்பனை செய்கின்ற பொருட்களுக்கான செலவு ரூபா. **5,508,020** ஆன மொத்த பெறுமதி பொருட்டு SAP கணினி மென்பொருட்களுக்கு வழங்கியிருந்த குறைப்பாடுகளுடன்கூடிய கட்டளையிடல் காரணமாக, அந்தப் பெறுமதி விசேட பொருட் கட்டளைகளின்மீது விற்பனை கணக்கில் பற்று வைக்கப்பட்டிருந்தது. அந்தப் தவறினை செவ்வையாக்குவதற்கு மேற்கொண்டிருந்த நாட் குறிப்புகள் குறைப்பாடுகளுடன் காணப்பட்டதால் விற்பனை பொருட்களில் செலவின கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டிய ரூபா.**5,508,020** ஆன பெறுமதி, விசேட கட்டளை பொருட்கள் களஞ்சிய இருப்புக் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருந்தது. இந்த குறைப்பாடுகளுடன்கூடிய நாட் குறிப்புகள் காரணமாக **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.**5,508,020** ஆல் விற்பனை பொருட்களின் செலவு கணக்கில் குறைவாக குறிப்பு வைக்கப்பட்டிருந்ததுடன், விசேட பொருட் கட்டளை களஞ்சிய இருப்புக் கணக்கினை அப் பெறுமதியால் அதிகரித்து குறிப்பு வைத்து நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது

(ஈ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை பிரகாரம், செலுத்தப்பட வேண்டிய வெட் வரி மீதி ரூபா.**716,749** ஆயினும், நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய வரி பெறுமதி ரூபா.**5,664,297** என்ற வகையில் குறிப்பு வைக்கப்பட்டதால் செலுத்தப்பட வேண்டிய வெட் வரி கணக்கின் மீதி ரூபா.ரூ.**4,947,548** ஐ அதிகமாக குறிப்பு வைக்கப்பட்டிருந்தது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம், நிலுவை வெட் வரி தொகையின் மொத்தம் ரூபா. **1,877,463** ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்படவில்லை.பொருட்டு செலுத்தப்பட வேண்டிய அபராத பணத்தொகையின் மொத்தம் ரூபா.1,877,463 ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை படி செலுத்தப்பட வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி பெறுமதி ரூபா.**5,383,496** ஆயினும், நிதிக் கூற்றுகளில் அந்த வரி பெறுமதி ரூபா.**28,562,386** என்று குறிப்பு வைக்கப்பட்டதால் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி பெறுமதி ரூபா.**23,178,890** ஆக அதிகமாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம், நிலுவை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி பொருட்டு செலுத்தப்பட வேண்டிய அபராதப் பணத் தொகையின் மொத்தம் ரூபா.**5,365,512**ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்படவில்லை.

(ஊ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை பிரகாரம், செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரி (ESC) மீதி ரூபா.**2,926,736** ஆயினும், நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய அந்த வரி பெறுமதி ரூபா.**23,332,443** என்று குறிப்பு வைக்கப்பட்டதால், செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரி பெறுமதி ரூபா.**20,405,707** ஆல் அதிகமாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி நிலுவை வரி அறிக்கை பிரகாரம், செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரி பொருட்டு அபராதப் பணத் தொகை மொத்தம் ரூபா.**1,546,935**ஐ மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கை படி, சபையால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை வரி மீதி ரூபா.**22,387,108** ஆனதுடன். நிலுவை வரி மிகை கட்டணம் ரூபா.**590,768** ஆகும். சபையால் முன்னரான ஆண்டுகளில் வருமான வரி மற்றும் மிகை கட்டணத் தொகை கணக்கி-டப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை என்பதுடன், இந்த செலுத்தப்பட வேண்டிய வருமான வரி மற்றும் மிகை கட்டணம் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய அபராதப் பணம் ரூபா.**2,481,404** ஆவதுடன், அந்த பெறுமதியும் செலுத்தப்பட வேண்டிய செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) **2018** ஆம் ஆண்டில் தேய்மானம் கணக்கிடுகையில் மொத்த பெறுமதி ரூபா.**48,984,819** ஆன காணி மற்றும் கட்டிடங்களுக்கான தேய்மானம் கணக்கிடப்படாமையால், மொத்தம் ரூபா.**1,224,620** ஆன தேய்மானப் பெறுமதியை மீளாய்விற்கான ஆண்டில் குறைவாக கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) **2018** ஆம் ஆண்டு திசெமபர் 31 ஆந் திகதியில் பேரேடு கணக்குகளின் மீதி, கணக்கு அட்டவணைகள் மற்றும் நிதிசார் கூற்றுகளுடன் பரிசோதனை செய்கையில் 02 பேரேடு கணக்குகளுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.**718,258** ஐ நிதிக் கூற்றுகளில் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஒ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பொருட் வழங்குநர்களிடத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 05 கொள்வனவு நிலையங்களிடம் வழங்கியிருந்த மொத்தம் ரூபா.**2,225,750** ஆன சீராக்கப்படாத முற்பணப் பெறுமதி நிதிசார் கூற்றுகளை தயாரிக்கையில் மொத்த கடன்தருநர்களின் பெறுமதியில் குறைவாக காட்டப்பட்டுள்ளதால், கடன் தருநர்களின் பெறுமதி குறைவாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஓ). சபையிடம் **2015, 2016** மற்றும் **2017** கணக்கு ஆண்டுகளுக்கான கணக்காய்வு கட்டணங்களுக்கான இன்வொயிஸ் பத்திரம் வழங்குவதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்திடம் இணக்கம் தெரிவிக்காமையால் கணக்காய்வு கட்டணங்களுக்கான இன்வொயிஸ் பத்திரம் வழங்குவதற்கு இயலாதிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு கட்டணமான ரூபா.**1,568,717** ஆன கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

(ஔ) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 14 கண்காட்சி கூடங்கள் மற்றும் இருப்பு களஞ்சியங்களுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளின்படி இருப்புகளின் பெறுமதி மொத்தம் ரூபா.**434,008,464** ஆயினும், அந்தக் கண்காட்சி கூடங்கள் மற்றும் இருப்புக் களஞ்சியங்களில் பௌதீக இருப்புகளின் மீளாய்வு அறிக்கை படி மொத்தப் பெறுமதி ரூபா.**433,284,445** ஆகியதால் நிதிக் கூற்றுகளில் இருப்பு ரூபா.**724,019** ஐ அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(க) மீளாய்வு சபை அறிக்கை மூலம் வருடாந்தம் வெளிப்படுத்திய இருப்புகளின் மிகை, பற்றாக்குறை நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பவற்றுக்கு உள்ளான பொருட்களின் இருப்புகளை அடையாளம் காணப்பட்டு செவ்வைப்படுத்தாது, தொங்கல் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களை குறிப்பு வைக்கப்பட்டதால் அந்தக் கணக்கில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.**93,841,464** ஆன பற்று மிகை காணப்பட்டது. அந்த பற்று மீதி முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கில் வரவு மீதிக்கு எதிராக பதிவழித்தல் காரணமாக, தொங்கல் கணக்கில் வரவு மீதி மற்றும் முன்னரான ஆண்டின்

சீராக்கல் கணக்கில் வரவு மீதி நிதிக் கூற்றுகளில் ரூபா.**93,841,464** ஆக குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ங) **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையின் இருப்புகள் தொடர்பாக 12 பேரேடு கணக்குகளில் மொத்த பெறுமதி ரூபா.**38,441,797** ஆன இருப்பு மீதி, எழுத்திலான அனுமதியின்றி நாட் குறிப்புகளை பயன்படுத்தி முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கினை பற்று வைத்து பதிவழிக்கப்பட்டிருந்தது. ஆகையால் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் கூற்றுகளில் இருப்பு கணக்கின்மீது மற்றும் முன்னரான ஆண்டு சீராக்கல் கணக்கில் வரவு மீதி, அந்த பெறுமதியில் குறைவாக குறிப்பிடப்பட்டு நிதி கூற்றுகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ச) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01, நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 32 ஆவது பந்தி பிரகாரம், சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அல்லது வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொன்றுடன் பதிலீடு செய்வதற்கு முடியாதென அறிவிக்கப்ப-ட்டிருப்பினும், சபையால் 2018 ஆம் ஆண்டு திசெமபர் 31 ஆந் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய 08 கணக்குகளில் மொத்தம் ரூபா.**32,208,102** மற்றும் செலுத்-தப்பட வேண்டிய 05 கணக்-குகளின் மொத்தம் ரூபா.**32,208,102** ஆகிய பெறுமமதியினை **70401-00-00** ஆம் இலக்கம் கொண்ட, நீண்ட நாட்களிலான கடன் மீதி சீராக்கல் பேரேடு கணக்கினை பயன்படுத்தி, திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்ளாது ஒவ்வொன்றுக்கு பதிலீடு செய்து நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஞ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 110 ஆவது பந்தி பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன்படி கணக்கீட்டு தவறுகளை கடந்த காலத்திற்கு சீராக்குகையில், நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் கணக்கில் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்படுதல் வேண்டுமாயினும், சபை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உரிமை மூலதன மாற்றுக் கூற்று தயாரிக்கையில் ரூபா.**178,017,763** ஆன வருமான ஒதுக்கத்தின் மொத்த பெறுமதி, நிறுத்தி வைத்தல் வருவாய் கணக்கின் ஆரம்ப மீதிக்கு சீராக்காது, வருமான ஒதுக்கமாக உரிமை மூலதன கூற்றில் புறம்பான நிரலில் சீராக்கப்பட்டிருந்தது.

(ட) மேற்படி நியமத்தின் 110 ஆவது பந்தி பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன்படி கடந்த காலத்திற்கு ஏற்ற வகையில் சீராக்குகையில், கணக்கீட்டு கொள்கைகளின் வேறுபாடுகள் மற்றும் தவறுகளை செவ்வையாக்குவதன்மூலம் ஏற்ப-டும் விளைவுகளை உரிமை மூலதன மாற்றக் கூற்றில் வெவ்வேறாக வெளிப்படுத்தல் வேண்டுமாயினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாது 2018 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.**139,836,768** ஆன வருமான ஒதுக்கம் சீராக்குதலாக குறிப்பிடப்பட்டு உரிமை மூலதன மாற்றக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது

(ண) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02, இருப்புகள் தொடர்பான நியமத்தின் 34 ஆவது பந்திபடி இருப்புகள் தொடர்பில் அடையாளம் காணப்பட்ட ரூபா.**93,841,464** ஆன நட்டம் நியமத்தின் **36 (உ)** பிரிவு பிரகாரம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை

(த) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையின் கடன் அட்டைகளின் மீது விற்பனை பெறுமதி ரூபா.**27,659,287** ஆகும். ஒவ்வொரு காட்சிகூடங்களை அடிப்படையாகக்கொண்டு கடன் அட்டைகளின் விற்பனை பெறுமதி மற்றும் கடன் அட்டைகளின் மீது பணம் அறவிடல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக இப் பணத் தொகை அறவிடும் செவ்வைத்தன்மை பரிசோதிப்பதற்கு முடியவில்லை.

(ப) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்றுகளில் மொத்தம் ரூபா.11,932,359 தொகையிலான தீர்க்கப்படாத முறபண மீதிகள், மொத்தப் பெறுமதி ரூபா.10,672,111 என்ற தீர்க்கப்படாத முற்பண பெறுமதி என்பன உறுதிப் படுத்தி கொள்வதற்கான சாட்சிகளை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ய) 2018 ஆண்டுக்கு ஏற்புடையதாக சபையின் தேறிய இலாபம் மீது 25% ஆன ரூபா.5,149,100 ஐ வருமான வரி பொறுப்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு ஏற்புடையதான வரி கணக்கிடும் அறிக்கைகள், வரி செலுத்தும் கடிதக் கோவைகள் மற்றும் எழுத்திலான சாட்சிகள் கணக்காய்வின் பரிசோதனைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ர) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மொத்தம் ரூபா.41,217,749 செலுத்தப்பட வேண்டிய 04 கணக்குகளுக்கு ஏற்புடையதாக செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான கடன்தருநர்களின் மீதி உறுதிப்படுத்தும் கடிதங்கள், கடன்தருநர்களின் கடிதக் கோவைகள், கடன் தருநர்களின் அட்டவணைகள் மற்றும் கடன் தருநர்களின் காலப் பகுப்பாய்வு ஆகிய கணக்காய்வு சான்றுகள் எதனையும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ல) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் சபையின் 03 வங்கி கணக்குகளில் பேரேடுகளின்படி மொத்தப் பறுமதி ரூபா.3,428,033 ஆயினும், வங்கி மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களின்படி மொத்தப் பெறுமதி ரூபா.5,138,010 ஆகியதால் ரூபா.1,709,977 ஆன ஒப்பிடப்படாத மீதி காணப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுதழிப்பதற்கான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் சயின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**2018** இன் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் **16(1)** ஆம் உபபிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின்போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்புகளை அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின்படி, எனது அறிக்கையில் மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்த, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையின்படி உரிய கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்கையில் 1.2 இன் கீழான (ஈ), (உ), (ஊ), (எ), (ஒ), (ஓ), (க), (ங), (ச), (ப) ஆகிய அவதானிப்புகளும் சட்ட திட்டங்கள் கீழான (அ), (ஆ) 11 மற்றும் 3(ஈ) அவதானிப்புகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் ஆட்சி சபையில் எவரேனும் உறுப்பினர் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.
- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின்படி பின்வரும் அவதானிப்புகளை தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டம் அல்லது சபையின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கியுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமையாதவாறு செயற்பட்டுள்ளதாக.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் தொடர் | விபரம் |
|---|---|
| **2002** ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் III அத்தியாயத்தில் **21 (1)**பிரிவு | ஒவ்வொரு வரி காலப் பகுதிக்கும் பெறுமதி சேர் வரி மீதான அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டில் சுப்பர் ப்ராண்ட் நில வாடகை வருமானம்மீது அறவிட-ப்பட்ட மொத்தம் ரூபா.**465,750** ஆன வரித் தொகையினை அனுப்பி வைப்பதற்கும், வரி அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| **2003** ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய பீஈடீ/**12** ஆம் இலக்க அரச தொழில் முயற்சி-கள் சுற்றறிக்கை (I) **5.1.3**பிரிவு | பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட இணைந்த திட்டத்தின் இற்றைப்படுத்திய பிரதிகளை வரவு செலவு மதிப்பீட்டுடன் நிரல் அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதியிடம் நிதி ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், **2018 – 2022** இணைந்த திட்டம் **2018** செப்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகரித்து கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| **4.2.6** பிரிவு | செயலாற்றுகை அறிக்கை தயாரித்து காலாண்டு முடிவடைவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| **2018** ஆம் ஆண்டு திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ **03/2018** ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை **2.2** மற்றும் **2.3** பிரிவு | வரையுள் வருடாந்த அறிக்கை மற்றும் நிதி வெளியீடுகள் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது, மொத்தம் ரூபா.**2,160,000** ஐ செலுத்தப்பட வேண்டிய போனஸ் தொகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. |

- 2018 ஆம் அண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின்படி சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கமைவாக பணியாற்றப்பட்டுள்ளது.
- 2018 ஆம் அண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின்படி சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் ஏற்புடைய சட்டதிட்டங்களின்படி பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை.

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புள்**

(அ). மீளாய்விற்கான ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை புரள்வு ரூபா.50,000,000 ஆயினும், உண்மையான விற்பனை ரூபா.14,960 ஆகியதால் அந்த விற்பனை இலக்குகளை அண்மித்துக்கொள்வதன் முன்னேற்றம் 0.03% ஆகும்.

(ஆ). விற்பனை அதிகரிப்பதற்காக புதிய 250 வழங்குநர்களை பதிவு செய்வதற்கும், கைவினை உற்பத்திகளை நேரடியாக கொள்வனவு செய்வதற்கு 25 கைவினை உற்பத்தி கிராமங்களை உருவாக்குதலையும் இலக்காக கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் 97 புதிய வழங்குநர்களை பதிவு செய்வதற்கும், 05

கைவினை உற்பத்தி கிராமங்களையும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த இலக்குகளை அடைந்துக்கொள்ளும் பௌதீக முன்னேற்றம் ஒழுங்குமுறையில் 39% மற்றும் 20% ஆகியது.

(இ) 2000 ஆம் அண்டு சனவரி தொடக்கம் 2016 ஆம் ஆண்டு யூன் வரையிலான நிலுவை ஊழயிர் சேமலாப நிதியம் மற்றும் மிகை கட்டணம் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் ரூபா. 6,282,072 ஆன தொகை ஊழியர் சேமலாப நிதியத்திடம், மிகை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கட்டுபெத்த தச்சுத் தொழில் கருத்திட்டப் பிரிவில் கட்டிடங்கள் பயனற்று இருக்கையில் கோட்டையில் உள்ள லக்சல கட்டிடத்தில் பேணிச் சென்ற சபையின் கணக்குப் பிரிவு அடங்கலாக பல பிரிவவுகளில் பேணிச் சென்ற தனியார் நிறுவனத்தில் வாடகை அடிப்படையில் மீளாய்விற்கான ஆண்டிலும் கட்டிடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்காக மீளாய்விற்கான ஆண்டில் கட்டிடங்களின் வாடகையாக ரூபா.9,300,000 ஐ செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி